
தங்களுடைய மனதைக் கொள்ளை கொள்ளும் தங்க, வைர நகைகளுக்கு



அம்பிகா ஜுவலர்ஸ்

77, செட்டியார் தெரு, கொழும்பு-11.

தொலைபேசி. 422839, 434238



செய்தி இதழாக பதிவு பெற்றது

# தினபதி

ரூ 3/50

THE MOST INFLUENTIAL TAMIL DAILY IN SRI LANKA

DINAPATHI இல 6552 1990 மார்ச் 30 வெள்ளிக்கிழமை ★ ★ ★ දිනපති



தரமான 22 கரட் தங்க வைர நகைகளுக்கு நம்பிக்கையான ஸ்தாபனம்



Ambiga

JEWELLERS (PTE) LIMITED

SEA STREET, COLOMBO-11.

Phone: 422839 434238


# புதிய அமைச்சர்கள் இன்று பதவி பிரமாணம்

## விஜேதுங்க தான் மீண்டும் பிரதமர்—நிதி அமைச்சர்

### கணேசலிங்கமும் மந்திரியாகலாம்

கொழும்பு, மார்ச் 29

புதிய அமைச்சர்களுக்கு ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாச இன்று வெள்ளிக்கிழமை பதவிப் பிரமாணம் செய்து வைப்பார். திரு. டி. பி. விஜேதுங்க தான் மீண்டும் பிரதமராகவும் நிதி அமைச்சராகவும் பதவியில் அமர்த்தப் படுவார் என்று அறிய வருகிறது.

பழைய அமைச்சர்களில் இரண்டொருவரின் நிலைமை சந்தேகத்துக்கு உரியதாக இருக்கிறது அதேவேளை புதியவர்கள் சிலர் நியமிக்கப்படவிருக்கிறார்கள்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பொருளாளர் திரு கே கணேசலிங்கம அமைச்சராக நியமிக்கப் படுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது—

ஜனாதிபதி பிரேமதாசா தமது புதிய அமைச்சரவை உறுப்பினர்களுக்கும ராஜாங்க அமைச்சர்களுக்கும இன்று பிற்பகல் ஜனாதிபதி மாளிகையில் பதவிப் பிரமாணம செய்து வைப்பார்— புதிய திட்ட அமைச்சர்களையும அவர் நியமிப்பார்—

ஜனாதிபதி தமது புதிய அமைச்சரவையை நேற்றே அறிவிப்பார் என எதிர்பார்க்கப்பட்டது— ஆனால் அவர் வேறு பல அலுவல்களில் நேற்று ஈடுபட்டிருந்ததால் அது நடைபெறவில்லை—

புதிய அமைச்சரவையில் இடமபெறப் போகும அமைச்சர்கள் யார், யார் என்றும புதிய ராஜாங்க அமைச்சர் திட்ட அமைச்சர்கள் யார் என்பதும பரம ரகசியமாகவே இருந்து வருகிறது ஆனாலும உயர் அரசாங்க வட்டாரங்களில் இருந்து சில யூகங்கள் கிடைத்துள்ளன—

இவற்றின் பிரகாரம திரு டி பி விஜேதுங்கவே தொடர்ந்து பிரதமராகவும நிதி அமைச்சராகவும பதவி வகிப்பார் என்று ... கட்சி எம பி ரோஹான் அபே குணசேகர ஆகிய இருவரும அமைச்சரவையில் இடம்பெற லாம் என இத்தகவல்கள் குறிப்பிடுகின்றன—

சிரேஷ்ட அமைச்சர்களுள்

(2ஆம பக்கம பார்க்க)

கடத்தப்பட்ட

## 53 படகுகளில் சென்ற மீனவரை காணவில்லை

சென்னை மார்ச் 29

நாகபட்டினம பகுதியில் இருந்து மீன் பிடிக்கச் சென்ற 61 படகுகளில் 8 படகுகள் மாத்திரமே திருமபியுள்ளன—

கடந்த 27 ஆம திகதி நாக

சோமண்ணை



பரீட்சை எழுதிற பெடியளும மந்திரி பதவியை எதிர்பார்த்திருக்கிற எம பிமாரும இப்ப ஒரே மனநிலையிலைதான் இருப்பினம் பாருங்கோ—

## மைசூர் பருப்பு விலை 4 ரூபா அதிகரிப்பு

கொழும்பு மார்ச் 29

மைசூர் பருப்பு ஒரு கிலோவின் விலை மேலும நான்கு ரூபாவினால் அதிகரிக்கப்பட்டிருக்கிறது—

இதன்படி மைசூர் பருப்பு ஒரு கிலோவின் புதிய விலை 47 ரூபா 50 சதமாகும—

உலக சந்தையில் மைசூர் பருப்பின் விலை திடீரென அதிகரித்து விட்டது இதனாலேயே மைசூர் பருப்பின் விலையை அதிகரிக்க நேரிட்டது என்று கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம அறிவிக்கிறது—

பாலின் விற்பனை விலையும ஏப்ரல் முதல் வாரத்திலிருந்து அதிகரிக்கப்படும என்று நம்பப் படுகிறது—

பால் உற்பத்தியாளர்களுக்கு கொடுக்கும கொள்விலை ... மாதம ஒரு லீட்டர் ஒ... வால் அதிகரிக்கப்படும எ... கால்நடை அபிவிருத்தி ம... றும பால் உற்பத்தி ராஜாங்க அமைச்சின் உதவி இயக்குநர் திரு டி பெர்னாண்டோ தெரிவித்திருக்கிறார்—

டிக்கோயா புளியாவத்தை கோமாதா பால் உற்பத்தியாளர் சங்கத்தின் பொதுச் செயலாளரும, சமாதான நீதிவானுமாகிய திரு கிருஷ்ணன் ஜெயராமனுக்கு எழுதியுள்ள கடிதத்திலேயே திரு டி பெர்னாண்டோ இத

(2ஆம பக்கம பார்க்க)

இயல்பு நிலை ஏற்படுத்துமாறு

## இலங்கை அரசு வற்புறுத்தப்பட்டு வருகிறது

### இந்திய அமைச்சர் கூறுகிறார்

புதுடில்லி, மார்ச் 29

ஒரிஸ்ஸா முகாமகளில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகளை விரைவில் இலங்கைக்குத் திருப்பி அனுப்புவதற்கு வசதியாக வடக்கு, கிழக்கில் இயல்பு நிலையை ஏற்படுத்துமாறு இலங்கை அரசை இந்திய அரசு வற்புறுத்தி வருகிறது.

இப்படி இந்திய வெளியுறவு அமைச்சர் திரு ஐ பி குஜ்ரால் இந்திய நாடாளுமன்றத்தின் மக்கள் சபையில் நேற்றுத் தெரிவித்தார்.

அமைச்சர் குஜ்ரால் நேற்று முன்தினம நாடாளுமன்றத்தில் மாநிலங்கள் அவையான ராஜ்ய சபையில் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் தமிழ் அகதிகளை இலங்கைக்குத் திருப்பி அனுப்புவதற்கு வேண்டிய சூழ்நிலையை ஏற்படுத்தமாறு இலங்கை அரசை இந்திய அரசு வற்புறுத்தும என்று சொன்னார்.

ஆனால் நேற்று மக்கள் சபையில் அவர் அகதிகள் பிரச்சினை பற்றிக் குறிப்பிடுகையில் இலங்கை அரசு வற்புறுத்தப்பட்டு வருகிறது என்று திட்டவட்டமாகச் சொன்னார்.

அவர் மேலும கூறியதாவது:—

ஒரிஸாவில் உள்ள அகதி முகாமகளில் இப்போது தங்கி

(2ஆம பக்கம பார்க்க)

## ரூபவாஹினியில் மலையக நிகழ்ச்சிகளுக்கு தனியாக நேரம்

கொழும்பு, மார்ச் 29

இலங்கை ரூபவாஹினியில் மலையக பாரமபரிய கலாசார நிகழ்ச்சிகளுக்கு தனியான நேரம ஒதுக்கப்படும.

இவ்வாறு கல்வி கலாசார தகவல் துறை அமைச்சர் திரு டபிள்யூ ஜே எம லொக்கு பண்டார அறிவித்துள்ளார்.

எழுதி உள்ள கடிதம ஒன்றிலேயே இப்படிக் குறிப்பிட்டிருக்கிறார்.

தேசிய தகவல் தொடர்பு சாதனங்கள் அனைத்து இன மக்களினதும பாரமபரிய கலாசாரங்களை பிரதிபலிப்பனவாக இருக்க வேண்டும.

ரூபவாஹினியில் தமிழ் நிகழ்ச்சி

## பூஸா முகாமில் 120 பேர் பரீட்சை எழுதுகிறார்கள்

கொழும்பு மார்ச் 29

பூஸா முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மாணவர்களில் 120 பேர் இன்று (30 ஆம திகதி) இராணுவ முகாமில் வைத்தே ஜீ ஈ க சாதாரணதர பரீட்சைக்கு தோற்றுகிறார்கள்—

வடக்கு, கிழக்கு உட்பட நாட்டின் சகல பாகங்களிலும இன்று இப்பரீட்சை ஆரமபமாகிறது—

சுமார் ஐந்தரை லட்சம் பரீட்சார்த்திகள் இப்பரீட்சைக்கு தோற்றுகின்றனர்—

இப்பரீட்சை ஏப்ரல் 8 ஆம திகதி வரை தொடர்ந்து நடைபெறும—

(உ-வ)

## தொலைபேசி துண்டிப்பு

ருக்கும இன்று பிற்பகல் ஜனாதி பதி மாளிகையில் பதவிப் பிர மாணம செய்து வைப்பார்- புதிய திட்ட அமைச்சர்களையும அவர்

சில யூகங்கள் கிடைத்துள்ளன-

இவற்றின் பிரகாரம திரு டி பி விஜேதுங்கவே தொடர்ந்து பிரதமராகவும நிதி அமைச்சரா கவும பதவி வகிப்பார் என்று தெரிகிறது-

ஐக்கிய தேசியக் கட்சியின் இன்றைய பொருளாளர் திரு கே கணேசலிங்கம, நுவரெலிய மாவட்டத்தின் ஐக்கிய தேசிய

நாகபட்டினம பகுதியில் இருந்து மீன் பிடிக்கச் சென்ற 61 படகுகளில் 8 படகுகள் மாத்திரமே திருமபியுள்ளன-

கடந்த 27 ஆம திகதி நாக பட்டினம பகுதியில் உள்ள அக்கரைக்கோட்டை, சூலகுப்பம ஆகிய இடங்களில் இருந்து மீன வர்கள் 61 படகுகளில் மீன்

(2ஆம பக்கம பார்க்க)

நேரம ஒதுக்கப்படும.

இவ்வாறு கல்வி கலாசார தகவல் துறை அமைச்சர் திரு டபிள்யூ ஜே எம லொக்கு பண்டார அறிவித்துள்ளார்.

ஊவா மாகாண சபை உறுப்பினரும இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத் தொழிலாளர் கல்வி இயக்குநருமான திரு வேலாயுதத்திற்கு அமைச்சர்

தேசிய தகவல் தொடர்பு சாதனங்கள் அனைத்து இன மக்களினதும பாரமபரிய கலாசாரங்களை பிரதிபலிப்பனவாக இருக்க வேண்டும.

ரூபவாஹினியில் தமிழ் நிகழ்ச்சிகள் அதிகரிக்கப்பட்ட போதிலும மலையக மக்களின் பாரமபரிய கலாசார நிகழ்ச்சிகளுக்கு இடமளிக்கப்படவில்லை. இது

(2ஆம பக்கம பார்க்க)

(2ஆம பக்கம பார்க்க)

## தொலைபேசி துண்டிப்பு ஏப். முதல்

கொழுமபு மார்ச் 29

தொலைபேசி நிலுவை கட்டணங்களை செலுத்துவதற்காக தொலைத் தொடர்பு திணைக்களம மூலம தொலைபேசி பாவனையாளர்களுக்கு வழங்கப்பட்ட சலுகைக் காலம நாளை 31 ஆம திகதியுடன் முடிவடைகிறது-

இந்தக் காலக்கெடுவுக்கு முன்னர் தொலைபேசி நிலுவைக் கட்டணங்களை செலுத்தத் தவறும தொலைபேசி பாவனையாளர்களின் தொலைபேசி இணைப்

(2ஆம பக்கம பார்க்க)

இப்பரீட்சை ஏப்ரல் 8 ஆம திகதி வரை தொடர்ந்து நடைபெறும-

(உ-வ)

## நோன்பு தொழுகை நேரங்கள்

| | |
|---|---|
| ஸஹர் முடிவு | — 4-36 |
| ஸுபஹ்ர் | — 4-51 |
| சூரிய உதயம | — 6-11 |
| ளுஹ்ர் | — 12-20 |
| அஸர் | — 3-24 |
| மஃரிபு | — 6-21 |
| இஷா | — 7-41 |

## கடத்தப்பட்ட லெப்டினன்டின் எலும்புக்கூடா?

கொழுமபு மார்ச் 29

இறந்த ஒருவரின் எலுமபுக் கூடு, மண்டையோடு என்பன அமபலாங்கொடை ஆற்றிலிருந்து கண்டெடுக்கப்பட்டன-

இவை டிசமபர் மாதம 22 ஆம திகதி கடத்திச் செல்லப்பட்ட இராணுவப் படை லெப்டினன் ஒருவருடையது என சந்தேகிக்கப்படுகிறது-

இச்சமபவம தொடர்பாக தென் பகுதியைச் சேர்ந்த சப்-இன்ஸ்பெக்டர் ஒருவர் உட்பட ஐவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்-

தென் பகுதிக்கு பொறுப்பான பிரதி பொலீஸ் மா அதிபர் திரு டபிள்யூ ஏ வீரரத்ன இத்தகவலை தெரிவித்தார்- (உ—வ)

# வடக்கில் இராணுவ முகாம்கள் கோட்டை, பலாலியில் மட்டும்

## அரசு—புலிகள் இணக்கம்

— க அரசரத்தினம —

யாழ்ப்பாணம, மார்ச் 29

வடக்கில் கோட்டையிலும பலாலியிலுமாக இரண்டே இரண்டு இடங்களில் மட்டும இராணுவ முகாமகள் இருக்கும. வல்வெட்டித்துறை இராணுவ முகாம 48 மணி நேரத்தில் மூடப்படும. பலாலி விமான நிலையம சர்வதேச விமான நிலைய மாகத் தரம உயர்த்தப்படும. அரசினரும புலிகளும பேச்சு வார்த்தை நடத்தி இப்படி இணக்கம கண்டுள்ளனர்.

வடக்கு கிழக்கு சமாதானக் குழுத் தலைவரான அமைச்சர் ஏ சி எஸ் ஹமீது நேற்று முன்தினம நண்பகல் கொழுமபிலிருந்து யாழ்ப்பாணம வந்து பலாலி இராணுவ முகாமில் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தினார்.

சுமார் இரண்டு மணி நேரம பேச்சு வார்த்தை நடந்தது.

சட்டத்தை நிலை நாட்டும அதிகாரிகளுக்கும தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே சரியான புரிந்துணர்வை ஏற்படுத்துவது தொடர்பாக முக்கியமாகப் பேசப்பட்டது.

அரசாங்கம சுவீகரித்த உடைமைகளுக்காக அவற்றின் உரிமையாளர்களுக்கு நஷ்ட ஈடு வழங்குதல், தொலை தொடர்பு வசதிகளை மீண்டும சரிவர ஏற்படுத்துதல், கடல் ரோந்தில் கடற்படையினர் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள், சில தடை நிலைகளை நீக்குதல், சில தடை பல்வேறு விஷயங்கள் பற்றியும சினேகபூர்வமாகப் பேசி திருப்திகரமாக இணக்கம காணப்பட்டது.

இணக்கம காணப்பட்டனைய விஷயங்கள் வருமாறு:—

பலாலி விமான தளம விஸ்தரிக்கப்பட மாட்டாது. எனினும அது சர்வதேச விமான நிலைய தரத்திற்கு உயர்த்தப்படும.

* ஏற்கனவே விமான நிலைய விஸ்தரிப்புக்கென விவசாயிகளிடமிருந்து சுவீகரிக்கப்பட்ட நிலம, விவசாயிகளிடம திருப்பி ஒப்படைக்கப்படும.
* காரைநகர் கடற்படை முகாமை விஸ்தரிப்பது கட்டுப்படுத்தப்படும.
* பலாலி, யாழ் கோட்டை ஆகிய இரு முகாமகளில் மாத்திரமே இராணுவம முகாமிட்டிருக்கும. எனைய முகாமகள் மூடப்படும.

ஆயுதப் படையினரின் எண்ணிக்கைக் கட்டுப்படுத்தப்படும.

* நயினாதீவு இறங்குதுறையில் கடற்படையினர் சோதனை செய்வது உடனடியாக நிறுத்தப்படும.
* வல்வெட்டித்துறை இராணுவ முகாம 48 மணித்தியாலத்திற்குள் மூடப்படும. அங்கிருக்கும படையினர் பலாலி முகாமுக்குச் செல்வர்.

பேச்சுவார்த்தையின் போது அரசு தரப்பில் மேஜர் சேபால

(2ஆம பக்கம பார்க்க)

தொலைதொடர்பு

## ஊழியர் சம்பளம் 40% அதிகரிக்கப்படும்

★

தொலைத் தொடர்பு திணைக்கள ஊழியர்களின் சமபளம நூற்றுக்கு 40 சதவீதத்தால் அதிகரிக்கப்படவுள்ளது-

விரைவில் தொலைத் தொடர்பு திணைக்களம கூட்டுத்தாபனமாக மாற்றப்படவுள்ளது-

உத்தேச மாற்றத்தின் பின்னரே இப்புதிய சமபள உயர்வு அமுல்படுத்தப்படும-

தொலைத் தொடர்பு திணைக்கள சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் இதனை நேற்று தெரிவித்தார்-

சமபள அதிகரிப்புடன் ஊழியர்களுக்கு புதிய லீவு முறைகள், வைத்திய வசதிகள் சேமநல முறைகள் என்பனவும அறிமுகப்படுத்தப்படும- (உ—ர)

## சீனி பருப்பு கப்பல்கள் துறைமுகத்துக்கு வெளியே காத்து நிற்கும் அவலம்

கொழுமபு மார்ச் 29

சீனி, பருப்பு மற்றும வேறு பொருட்களை ஏற்றி வந்துள்ள 12 கப்பல்கள் கொழுமபு துறைமுகத்துக்கு வெளியே கடந்த ஒரு வாரகாலத்திற்கு மேலாக நிறுத்தப்பட்டுள்ளன-

பொருட்களை ஏற்றிச் செல்வதற்கு லொறிகள் வராததமையினாலேயே இந்த கப்பல்கள் துறைமுகத்துக்கு வெளியே நிறுத்தப்பட்டிருப்பதாக இலங்கை துறைமுக அதிகார சபையின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்-

கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தினரால் இறக்குமதி செய்யப்பட்ட 6,000 தொன் பருப்பை ஏற்றி வந்திருக்கும கப்பல் ஒன்று கடந்த 23 ஆம திகதி முதல் துறைமுகத்துக்கு வெளியே நிறுத்தப்பட்டிருக்கிறது-

தனியார் துறையினருக்குரிய சீனியை ஏற்றி வந்திருக்கும இரு கப்பல்கள் கடந்த 21 ஆம திகதி முதல் துறைமுகத்துக்கு வெளியே நிறுத்தப்பட்டுள்ளன-

இதேவேளை கொள்கலன் கப்பல்கள் மூன்றும, உரக் கப்பல் ஒன்றும ஏனைய பொருட்களை ஏற்றி வந்துள்ள ஐந்து கப்பல்களும இவ்வாறே துறைமுகத்துக்கு வெளியே வெகு தொலைவில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன- (உ-வ)

ஆணித்தரமான அரசியல் செய்திகளையும் துணிச்சலான கருத்துரைகளையும் தருவது தினமுரசு

# திருமலை நகரில் 3 வருடங்களுக்கு பின் மாமூல் நிலை

திருகோணமலை, மார்ச்— 28 திருகோணமலை நகரில் மூன்று வருடங்களுக்குப் பின் மாமூலான நிலை தோன்றியுள்ளது— இரவு வேளைகளில் மக்கள் சுதந்திரமாக நடமாடுகின்றனர்—

இந்திய அமைதிப் படை கடந்த 24ஆம் திகதி திருகோணமலையை விட்டு வெளியேறியது இதனைத் தொடர்ந்து திருகோணமலை நகரில் மக்கள் மாமூலான வாழ்க்கை வாழத் தொடங்கியிருக்கிறார்கள்—

கடந்த நான்கு வருடங்களாக இயங்காமல் இருந்த தியேட்டர்கள் அனைத்தும் முதற் காட்சியுடன் இயங்குகின்றன—

ஊரடங்குச் சட்டத்தின் காரணமாக எட்டு மணியுடன் முடங்கிய மக்கள் இப்பொழுது இரவு நேரங்களில் தாராளமாக நடமாடும் காட்சியை காண முடிகிறது—

இரவு நேரக் கடைகள் சில நகரங்களில் ஆரம்பிக்கப்பட்டிருப்பதுடன் திருகோணமலை நகரத்துக்கும் ஏனைய கிராமங்களுக்குமான பஸ் சேவைகள் சீராகி வருகின்றன—

(இ—287)

## இலங்கையிலுள்ள சகல இனங்களினதும் உரிமை பாதுகாக்கப்படும்

### — ஹமீத்

கொழும்பு மார்ச் 29 இலங்கையிலுள்ள சகல இனங்களினதும் உரிமைகள் பாதுகாக்கப்படும்—

வடக்கு, கிழக்கு சமாதானக் குழுவின் தலைவரும், உயர்கல்வி விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சருமான அல்ஹாஜ் ஏ ஸி எஸ் ஹமீத இவ்வாறு கூறினார்—

ஜனாதிபதி திரு ஆர் பிரேமதாசவின் பணிப்பின் பேரில் அமைச்சர் அல்ஹாஜ் ஏ ஸி எஸ் ஹமீத் காத்தான்குடி, ஏறாவூர், ஓட்டமாவடி ஆகிய இடங்களுக்கு விஜயம செய்தார்—

இவர் இவ் விஜயத்தின்போது முஸ்லிம சமய கலாசார சமூக குழுக்களின் பிரதிநிதிகளை சந்தித்து உரையாடினார்—

அப்பொழுத அவர் தெரிவித்ததாவது:— ஜனாதிபதி, நீதியம சமத்துவமானதுமான இலங்கையை கட்டி எழுப்ப உறுதி பூண்டுள்ளார்—

இதன் அடிப்படையில் எல்லா இனங்களினதும உரிமைகள் பாதுகாக்கப்படும எனவும சமத்துவம கொடுக்கப்படும எனவும கூறினார்—

கிழக்கு மாகாண பிரச்சினைகளுக்கு இறுதித் தீர்வு காண அங்குள்ள சகல இன மக்களினதும கலந்தாலோசனைகள் பெறப்படும—

அதன் பின்னர் இதற்கு அமைதியானதும வரவேற்கத்தக்கதுமான நடவடிக்கை எடுக்கப்படும—

கிழக்கு மாகாணத்தில் சட்டம ஒழுங்கை நிலைநாட்டுவதில் முன்னேற்றம ஏற்பட்டு வருகிறது சட்ட அமுலாக்கல் நடவடிக்கைகளில் சமபந்தப்பட்ட அதிகாரிகள் விரைந்து ஈடுபட்டுள்ளனர்

முஸ்லிமகள் தஙகள் கிராம மட்டத்தில் உள்ள சமய தாபனஙகள் மூலம அவர்களது பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள வேண்டும—

இவ்வாறு அவர் கூறினார்—

(இ—404)

## பல்கலை மாணவர் கடத்தப்பட்டார்

கொழும்பு, மார்ச்— 29 மாத்தறை ருஹுணு பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ஒருவர் இனம தெரியாத கோஷ்டியால் கடத்தப்பட்டார்—

இது பற்றி பல்கலைக்கழக மாணவர்கள் கைதாகுவது தொடர்பாகக் கண்காணிக்கும குழுவுக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது—

இந்த மாணவரின் பெயர் எச் கே சரத்— இவர் இரண்டாம வருட கலைப் பிரிவில் கற்பவர்—

இந்த மாணவரைத் தேடும நடவடிக்கை ஆரமபிக்கப்பட்டு இருப்பதாகக் குழுவின் அதிகாரி கூறினார்—

(இ—007)

## பல்கலை அனுமதிக்காக புத்தளத்தை பின்தங்கிய பிரதேசமாக கணிக்க மகஜர்

புத்தளம, மார்ச் 28 "புத்தளம, ஆனைமடுவ கல்விப் பிராந்தியஙகளை பல்கலை அனுமதிக்காக பின்தஙகிய பிரதேசஙகளாக கணிக்கப்படல் வேண்டும"

இவ்வாறான கோரிக்கை அடஙகிய மகஜர் ஒன்று ஜனாதிபதியிடம சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் 3 ஆவது நட...

## புத்தளத்திலிருந்து கொழும்புக்கு நேரடி தபால் சேவை

புத்தளம, மார்ச்— 28 புத்தளத்திலிருந்து கொழும்பிற்கான துரித நேரடி தபால் விநியோக முறை அண்மையில் ஆரமபித்து வைக்கப்பட்டது—

இதன் மூலம கடிதஙகள் உடனுக்குடன் பட்டுவாடாச் செய்யப்பட்டு வருவதால் பொது மக்கள் பெரும நன்மையடைந்து வருகின்றனர்—

இதுபற்றி மேலும கூறப்படுவதாவது—

இதுவரை காலமும புத்தளத்திலிருந்து கொழும்புக்கு தபால்கள் இ போ ச பஸ் மூலம எடுத்துச் செல்லப்பட்டது—

அத்துடன் அனுராதபுரம சென்று அஙகிருந்தும கொழும்புக்கு அனுப்பப்பட்டு வந்தது—

அதேபோன்று கொழும்பிலிருந்து வரும தபால்கள் குருநாகல் வழியாகவும வந்தது இதனால் காலதாமதமும வீண் விரயமும ஏற்பட்டன—

இதனை புத்தளம தபால் நிலைய அதிபர் திரு கே டீ மூர்த்தி பலாமறை உயரதிகாரிகளுக்கு எடுத்துக் கூறியதைத் தொடர்ந்து தற்சமயம நிலைமை சீர் செய்யப்பட்டுள்ளது—

கொழும்பிலிருந்து தபால்கள் தற்சமயம வான் மூலம நேரடியாக புத்தளம தபால் நிலையத்திற்கே கொண்டு வரப்படுகின்றன—

காலை ஒன்பது மணிக்கே கொழும்பு தபால்கள் கொண்டு வரப்படுவதால் அவைகள் உடனுக்குடன் தரம பிரிக்கப்பட்டு பட்டுவாடாவும செய்யப்படுகின்றன—

அதேபோன்று புத்தளத்திலிருந்து சேகரிக்கப்படும தபால்கள் அனைத்தும பகல் ஒன்றரை மணியளவில் அதே வான் மூலம கொழும்புக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன—

அத்துடன் கொழும்பு பாதையிலுள்ள அனைத்து தபால் நிலையஙகளிலுமுள்ள தபால்கள் சேகரிக்கப்பட்டு மாலை 7 மணிக்கு முன் கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்டு அடுத்த நாள் பட்டுவாடா செய்யப்படுகின்றன

இந்த சேவையின் மூலம மக்கள் அதிகம பயன் பெறுகின்றனர்—

இச் சேவை தொடர்ந்தும நடைபெறும என தபால் அதிபர் திரு கே டீ மூர்த்தி "தினபதி"க்குத் தெரிவித்தார்

(இ—241)

## நாம் ஓரணியில் திரண்டால் தேவைகளை பெற்றுக் கொள்ளலாம்

### முஸ்லிம் லீக் வாலிப முன்னணி

கொழும்பு, மார்ச்— 29 குக்கிராமஙகளில் பிரிந்து வாழும எமது குறைகள் அரசாஙகத்துக்கு எட்டுவதில்லை—

அரசியல் வேறுபாடுகளை மறந்து நாம ஓர் அணியில் திரண்டால் தான் எமது தேவைகளைப் பெற்றுக் கொள்ளலாம

அகில இலஙகை முஸ்லிம லீக் வாலிப முன்னணிகளின் சமமேளன பொதுச் செயலாளர் அல்ஹாஜ் என் எம அமீன் இவ்வாறு கூறினார்—

குருநாகல் மாவட்ட முஸ்லிம லீக் வாலிப முன்னணி சமமேளனக் கூட்டம குருநாகல் ஸாஹிராக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது—

கூட்டத்துக்கு முஸ்லிம லீக் வாலிப முன்னணி வட மேல் மாகாண பிராந்திய அமைப்பாளரும, மாகாண சபை உறுப்பினருமான ஜனாப் ஏ எச் எம அலவி தலைமை வகித்தார்—

அல்ஹாஜ் அமீன் தொடர்ந்து கூறியதாவது—

குருநாகல் மாவட்ட முஸ்லிமகளின் தேவைகள் பற்றி ஆய்வு நடத்தி சரியான முறையில் திட்டஙகள் மேற்கொள்ளப்பட்டால் அவற்றை நிறைவேற்றவும அதற்கு வெளிநாட்டு உதவிகளைப் பெற்றுத் தரவும், வெளிநாட்டுத் தொடர்புடன் ஒரு முஸ்லிம கிராமத்தை முன்னேற்றம பொறுப்பை ஒப்படைக்கவும நாம தயாராக இருக்கிறோம

அதேபோன்று தொழில் வாய்ப்புக்கள் பெறக் கூடிய தேவையான திட்டஙகளுக்கும உதவிகள் பெற்றுத் தர முடியும என்றார்—

தலைவர் ஜனாப் ரிஸ்வி சின்ன லெப்பை—

முன்னணியின் பிரசாரச் செயலாளர் ஜனாப் எம ஸெட் அஹமத் முனவ்வர், மாவட்ட சமமேளனத் தலைவர் ஜனாப் என் ஏ எஸ் தஸ்லிம, பொதுச் செயலாளர் ஜனாப் பி எம பாரூக் உட்பட மற்றும பலர் உரை நிகழ்த்தினர்—

(இ—007)

## இலங்கை அரசு...

(1 ஆம பக்கத் தொடர்ச்சி)

யிருக்கும இலஙகைத் தமிழ் அகதிகள் சமபந்தப்பட்ட எல்லாப் பொறுப்புக்களையும மத்திய அரசு மேற்கொள்ளும.

அகதிகள் இஙகு தற்காலிகமாகவே தஙகி இருக்கிறார்கள். இலஙகையில் இயப்பு நிலை ஏற்பட்டதும இவர்கள் திருப்பி அனுப்பப்படுவார்கள்.

தமிழ் நாட்டில் ஏற்கனவே 90 ஆயிரத்திற்கும அதிகமான அகதிகள் தஙகியிருக்கிறார்கள். மேலும அகதிகளை அஙகே வைத்திருக்க முடியாத காரணத்தால் தான் இப்போது ஒரிஸ்ஸாவில் உள்ள அகதிகள் முதலில் தமிழ் நாடு சென்ற போது அவர்கள் அஙகே ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

அதற்காகத் தமிழ்நாடு அரசின் மீது பழி சுமத்துவது நியாயமாகாது. இப்படி அமைச்சர் குஜ்ரால் கேள்வி ஒன்றுக்குப் பதில் அளிக்கும போது கூறினார்.

(உ—கு)

## புதிய அமைச்சர்...

(1 ஆம பக்கத் தொடர்ச்சி)

ஒருவரான திரு காமினி திஸாநாயக்கா புதிய அமைச்சரவையில் இடமபெற மாட்டார் என ...

திரு காமினி திஸாநாயக்க "தினபதி"க்கு கூறினார்.

தற்போது ராஜாஙக அமைச்சராக இருக்கும திரு ஜோன் ...

## கண்டி ஆஸ்பத்திரி: தண்ணீர் தட்டுப்பாட்டை நீக்க வலியுறுத்து

கண்டி மார்ச் 28 கண்டி பெரியாஸ்பத்திரியில் கடந்த சில தினஙகளாக தண்ணிருக்கு தட்டுப்பாடு நிலவுகிறது— இதனை நீக்குவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும—

மத்திய மாகாண சுகாதார அமைச்சர் ஜனாப் எம எச் ஏ ஹலீம, சுகாதார அமைச்சர், திருமதி ரேணுகா ஹேரத்தையும கண்டி மாநகர மேயர் திருமதி சந்திரா ரணராஜாவையும இவ்வாறு கேட்டுள்ளார்—

மத்திய மாகாண சபையின் கூட்டம அண்மையில் கண்டி குயீன்ஸ் ஹோட்டல் மண்டபத்தில் நடைபெற்றது—

திரு டி பி சமதுங்க இக்கூட்டத்திற்கு தலைமை வகித்தார்—

இக்கூட்டத்தில் எதிர்க்கட்சி உறுப்பினரான திரு மகிந்த சேனாநாயக்க உரை நிகழ்த்துகையில் —

கண்டி பெரியாஸ்பத்திரியில் நிலவும தண்ணீர் தட்டுப்பாடு காரணமாக நோயாளர்களும டாக்டர்களும மற்றும ஊழியர்களும பெரிதும பாதிக்கப்பட்டுள்ளனர்—

இப்பகுதியில் ஒரு போத்தல் தண்ணீர் 3 ரூபாவுக்கு விற்பனை செய்வதாக தெரிய வருகிறது—

ஆதையால் மாகாண சபை தலையிட்டு கண்டி பெரியாஸ்பத்திரியின் தண்ணீர் தட்டுப்பாட்டை நீக்க நடவடிக்கை எடுக்க வேண்டும எனக் கேட்டுக் கொண்டார்—

இதற்கு பதிலளித்த மாகாண சுகாதார அமைச்சர் ஜனாப் எம எச் ஏ ஹலீம இந்த விவகாரம குறித்து தாம சுகாதார அமைச்சருக்கும கண்டி நகர மேயருக்கும அறிவித்திருப்பதாகவும் விரைவில் இந்த தண்ணீர் தட்டுப்பாடு நீக்கப்படும என்றும நமபிக்கை தெரிவித்தார்—

(இ—வ—017)

## கண்டியில் திரைப்பட விழா

கண்டி, மார்ச்— 28 கண்டி நகரில் சினிமாத் ...

## இன்றைய திரைகளில்

9 வது வாரம

கெப்பிட்டல் (கொழும்பு) 2-30, 6-00, 9-30

லிடோ (யாழ்நகர்) 10-30, 2-00, 6-00

நியூசிகிரி (கட்டுகஸ்தொட்டை) ...

## ரூபவாஹினி...

(1 ஆம பக்கத் தொடர்ச்சி)
ஒரு சமூகத்தவரை ஒதுக்கி வைப்பது போல் அமைந்துள்ளது.

இப்பொழுது இலங்கை வானொலியில் "குன்றின் குரல்" என்ற விசேட நிகழ்ச்சி மலையக மக்களின் பாரமபரிய கலாசாரத்தை பிரதி பலிப்பதாக அமைந்துள்ளது.

இதைப் போன்ற ரூபவாஹினியிலும தனியான நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்பட வேண்டும என திரு வேலாயுதம அமைச்சர் லொக்கு பண்டாரவிடம கோரிக்கை விடுத்திருந்தார்.

அதையடுத்து மலையக கலைஞர்களின் பெயர் பட்டியல் ஒன்றைத் தருமாறு திரு வேலாயுதத்தை அமைச்சர் கேட்டிருக்கிறார். (உ-ய)


தினபதி
சிறு விளம்பரம்

காணி விற்பனைக்கு

பேராதனை ரயில் நிலையத்திலிருந்த ஒரு மைலுக்குள் பாடசாலைகள், வைத்தியசாலைகள், பல்கலைக்கழகம மற்றும நிர்வாணங்களுக்கு சமீபத்தில் போக்குவரத்து, மின்சாரம், நீர் வசதிகளுடனை முஸ்லீமகள் அதிகமாக வசிக்கும பாதுகாப்பான பகுதியில் இன்னும சில காணித் துண்டுகள் விற்பனைக்குண்டு- தாமதமின்றி ஒதுக்கிக்கொள்ளவும, விபரங்களுக்கு- சட்டத்தரணி அபூசாலி, 6, கொழுமபு வீதி, கண்டி-
போன்- 23132


## கண்டி செல்வ விநாயகர் ஆலய பங்குனி உத்தரம்

கொழுமபு, மார்ச் 29

கண்டி கட்டுக்கலை செல்வ விநாயகர் ஆலய பஙகுனி உத்தர விழா இன்று கொடியேற்றத்துடன் ஆரபமாகின்றது.

இன்று முதல் தொடர்ந்து பத்து தினஙகளுக்கு இவ்விழா நடைபெறும எதிர்வரும 7 ஆம திகதி பஞ்சரத பவனியும 8 ஆம திகதி தீர்த்தோற்சவமும நடைபெறும.

பத்து நாட்கள் தொடர்ந்து நடைபெறும விழாவின் போது தினசரி விசேட ஆராதனைகளும சமயச் சொற்பொழிவுகளும விசேட நாதஸ்வர கச்சேரிகளும நடைபெறும.

இதனை மேற்படி ஆலய நிர்வாக அறஙகாவலர் திரு ஜீ கிருஷ்ணமூர்த்தி தெரிவித்தார். (இ-ய)

## மைசூர் பருப்பு...

(1 ஆம பக்கத் தொடர்ச்சி)
னைத் தெரிவித்திருக்கிறார்-

பாலின் கொள்விலையை அதிகரிக்குமபடி கோமாதா பால் உற்பத்தியாளர் சஙகம, கால்நடை அபிவிருத்தி, பால் உற்பத்தி ராஜாஙக அமைச்சரிடமும் கோரிக்கை விடுத்திருந்தது-

கோமாதா பால் உற்பத்தியாளர் சஙகச் செயலாளர் திரு கே. ஜெயராமன் இத் தகவலை "தினபதி"க்குத் தெரிவித்தார்

பாலின் கொள்விலை அதிகரிப்பதாலேயே விற்பனை விலையும அதிகரிக்கப்படலாம என்று நமபப்படுகிறது- (உ-வு-ல-096).

ஜனாதிபதியின் 3 ஆவது நடமாடும செயலக சேவைத் திட்டம அணமையில் புத்தளம நகரில் நடைபெற்றது.

அச்சமயம புத்தளம மாணவர் பேரவை அமைப்பாளர் ஜனாப் கே ஏ பாயிஷினால் ஒப்பமிடப்பட்ட மேற்படி பிரேரணை கையளிக்கப்பட்டது.

இம மகஜரில் மேலும கூறப்பட்டுள்ளதாவது:-

"புத்தளம மாவட்டத்திலுள்ள புத்தளம, ஆனைமடுவ, வென்னப்புவ, நாத்தாண்டி, சிலாபம ஆகிய பிரதேசஙகளில் க பொ த (உ/த) பரீட்சையில் கலந்து கொள்ளும மாணவர்களில் வென்னப்புவ போன்ற பிரதேசஙகள் அதி கூடிய பெறுபேறுகளையும, புத்தளம, ஆனைமடுவ போன்ற பகுதிகள் குறைந்த பெறுபேறுகளையும பெறுகின்றன.

இதனால் புத்தளம, ஆனைமடுவ பகுதிகளிலுள்ள மாணவர்களின் பெறுபேறுகள் பிரயோசனமற்றதாகி விடுகின்றன. அவர்களின் பல்கலை பிரவேசம பாதிக்கப்படுகின்றது.

வென்னப்புவ போன்ற பகுதிகளில் சிறந்த கல்விப் போதனைகளால் அதி உயர் பெறுபேறுகள் பெறப்படுகின்றன.

இதனால் அப்பகுதி மாணவர்கள் புத்தளம மாவட்டத்தின் பெருவாரியான பல்கலை அனுமதியைப் பெறுகின்றனர்.

எனவே சில பிரதேசஙகளில் நடைமுறைப் படுத்தப்பட்டிருப்பது போன்ற புத்தளம; ஆனைமடுவ பிராந்தியஙகளை பின் தஙகிய பிரதேசஙகளாக கணித்து பல்கலை அனுமதிக்காக குறைந்த புள்ளி நிலைகள் ஏற்படுத்தப்பட வேண்டும"

இவ்வாறு அம மகஜரில் கோரப்பட்டுள்ளது. (இ-241)

யில் இடமபெற மாட்டார் என இவ்வட்டாரஙகள் தெரிவித்தன.

"எது எப்படி நடந்தாலும நான் கடைசி வரை கட்சியில் இருந்து விலகிச் செல்ல மாட்டேன். தொடர்ந்து எனது சேவையை செய்வேன்" என்று

## 53 படகு...

(1 ஆம பக்கத் தொடர்ச்சி)
பிடிக்கச் சென்றனர்-

53 படகுகளில் சென்றவர்களுக்கு என்ன நடந்தது என்று தெரியவில்லை-

இந்திய கடற்படையினர் விசேட தேடுதல்களில் ஈடுபட்டுள்ளனர்- காணாமல் போனவர்களை கண்டுபிடிக்குமபடி தமிழ் நாடு அரச பாதுகாப்புப் படைக்கு பணித்திருக்கிறது-

அகில இந்திய வானொலி இச் செய்தியை ஒலிபரப்பியது- (உ-கு)

## வடக்கில்...

(1 ஆம பக்கத் தொடர்ச்சி)
ஆட்டிகலை, பொலீஸ் மா அதிபர் ஏர்னஸ்ட் பெரேரா, லெப்டினன்ட் ஜெனரல் ஹெமில்டன் வணசிஙக, மேஜர் ஜெனரல் ஸ்டான்லி சில்வா, விமானப் படைத் தளபதி ஜி டி டி குணவர்த்தன ஆகியோர் கலந்து கொண்டனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் சார்பில் யாழ் மாவட்ட இராணுவ தளபதி பானு, யாழ் மாவட்ட அரசியல் பொறுப்பாளர் ஸ்டான்லி டொமினிக், அரசியல் ஆலோசகர் டாக்டர் அன்டன் பாலசிஙகம, யாழ் மாவட்ட கட்சி அமைப்பாளர் ராஜன், தீவுப் பகுதி இராணுவ தளபதி ஜெம ஆகியோரும கலந்து கொண்டனர். (உ-ங-120)

தற்போது ராஜாஙக அமைச்சராக இருக்கும திரு ஜோன் அமரதுஙக வெளிவிவகார அமைச்சராகவும, திரு ரஞ்சன் விஜேரத்ன பெருந் தோட்டக் கைத்தொழில் துறை அமைச்சராகவும நியமிக்கப்படலாம என இவ்வட்டாரஙகள் மேலும தெரிவித்தன.

இரண்டு ராஜாஙக அமைச்சர்கள் கெபினட் அந்தஸ்து பெறுவர். அதாவது திரு ஏ ஜே ரணசிஙக தகவல் கலாசாரத் துறை அமைச்சராகவும திரு வீரசிஙக மல்லிமாராச்சி தொழில் அமைச்சராகவும நியமிக்கப்படலாம என நமபப்படுகிறது.

சிரேஷ்ட அமைச்சர்களுள் ஒருவரும அரசாஙகத்தின் சார்பில் புலிகளுடன் உத்தியோக பூர்வ பேச்சுவார்த்தைகளை நடத்தி வருபவருமான அல் ஹாஜ் ஏ சி எஸ் ஹமீது உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் அமைச்சராக நியமிக்கப்படலாம என்றும எதிர்பார்க்கப்படுகிறது.

கல்வி அமைச்சும உயர் கல்வி அமைச்சும ஒன்றிணைக்கப்பட்டு அப்பொறுப்பு திரு அத்துலத் முதலியிடம ஒப்படைக்கப்படலாம என்றும கூறப்படுகிறது.

சபை முதல்வராகவும, கைத்தொழில் அமைச்சராகவும இருந்த திரு ரணில் விக்கிரமசிஙக வர்த்தக கைத்தொழில் துறை அமைச்சராக நியமிக்கப்படலாம என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை பல்வேறு திட்ட அமைச்சர்களும நியமிக்கப்படவிருக்கின்றனர். இளைஞர் விவகார அமைச்சின் செயலாளராக முன்னர் கடமையாற்றிய திரு சரித்த ரத்வத்த ஒரு திட்ட அமைச்சராக நியமிக்கப்படலாம என எதிர்பார்க்கப்படுகிறது. (உ-ய-032)

கண்டி, மார்ச்- 28

கண்டி நகரில் சினிமாத் தியேட்டரில் இன்று 30ஆம திகதி "சத்யஜித்ரேயின்" திரைப்பட விழா நடைபெறும-

இலஙகை திரைப்படக் கூட்டுத்தாபனமும இலஙகையில் உள்ள இந்தியத் தூதரகமும இணைந்து இவ் விழாவை நடத்துகின்றது

இதில் பிரதம அதிதியாக ஜனாதிபதியின் விஞ்ஞான ஆலோசகரான பேராசிரியர் சிறில் பொன்னமபெரும கலந்து கொள்வார்- (இ-017)

## தொலைபேசி...

(1ஆம பக்கத் தொடர்ச்சி)
புகள் துண்டிக்கப்படும-

அத்துடன் அவர்களுக்கெதிராக வழக்குத் தொடர்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும-

தபால், தொலை தொடர்பு அமைச்சில் இதற்கென விசேஷ பிரிவு ஒன்றும அமைக்கப்பட்டிருக்கிறது-

இதவரை தொலைபேசி நிலுவைக் கட்டணமாக 60 கோடி ரூபா வரை அறவிடப்பட்டிருக்கிறது-

அரசாஙக திணைக்களஙகள், அமைச்சுக்கள் உட்பட சகல பிரிவுகளில் இருந்தும தொலை தொடர்பு திணைக்களத்துக்கு கடந்த காலஙகளில் 120 கோடி ரூபா நிலுவை கட்டணமாக அறவிட வேண்டியிருந்தது

நீண்ட காலமாக தொலைபேசி கட்டணஙகளை செலுத்தாதிருந்த தனியார் துறை தொலைபேசி பாவனையாளர்களிடமிருந்து கடந்த சில தினஙகளில் இரண்டரை லட்சம ரூபா நிலுவை கட்டணம அறவிடப்பட்டது என்று திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்- (உ-வு)


நியூசிகிரி
(கட்டுகஸ்தொட்டை)
10-30, 2-30, 6-15
பிரபு - அமலா
சிறுவன் மீனுராஜ் நடித்த
பூ...
பூவா
பூத்திருக்கு
(கலர்)

16 வது வாரம
ராஜா
(யாழ்நகர்)
10-30, 2-30, 6-00
மிட்லண்ட்
(நாவலப்பிட்டிய)
2-00, 6-00
ரஜனிகாந்த்
(இரட்டை வேடம)
ராதா - நதியா
நடித்த
ராஜாதி ராஜா
(கலர்)

17 வது வாரம
வெலிஙடன்
(யாழ்நகர்)
10-30, 2-30, 6-00
கிஙஸ்
(பதுளை)
10-30, 2-30, 6-00
கார்த்திக் - குஷ்பு
வி கே ராமசாமி
நடித்த
வருஷம் 16
(கலர்)

# மகாபாரத நாயகியாக நடித்து புகழீட்டிய ரூபா

## கல்கத்தா தந்த தாரகை

இந்திய ரசிகர்கள் கொஞ்சக் காலம தமிழ் மற்றும வேறு மொழி சினிமா படங்களை பார்ப்பதை நிறுத்தி வைத்து விட்டு வாரா வாரம தங்கள் வீட்டிலேயே தவறாமல் பார்த்து மகிழ்ந்து வந்த தொடர் மகாபாரதம என்பது தெரிந்ததுதான்—

பல நடிகர்கள் — நடிகைகள் டிவி தொடர்கள் மூலம மக்களிடையே புகழ்பெற்று அதன் தொடர்ச்சியாக சினிமாவுக்கு வருவது இப்போது மாமூலாகத் நடக்கிறது—

இவ்வாறு டிவி தொடர்களில் முதலாவது இடத்தை பிடித்துக் கொண்ட மகாபாரதத்தின் நாயகி திரௌபதிதான்—

இந்தத் தொடர் துவங்கி சுமார் மூன்று நான்கு மாதங்களுக்கு பிறகே திரௌபதி வேடத்திற்கான நடிகை தேர்வு செய்யப்பட்டார்—

இந்த வேடத்திற்காக இந்தியாவின் பிரபல சினிமா பட்டிணங்களாக கருதப்படும பமபாய், கல்கத்தா — சென்னை — ஐதராபாத் ஆகிய இடங்கள் தயாரிப்பாளர் பி ஆர் சோப்ராவினால் அலசப்பட்டதும கடைசியில் திரௌபதி வேடத்தில் நடிக்க முற்றிலும தகுதியானவர் என்று ரூபாகங்குலி என்ற கல்கத்தா நடிகை தேர்வு செய்யப்பட்டார்—

டிவியில் திரௌபதி வேடத்தை எல்லாரும ரசிக்கும்படி இந்த ரூபா செய்து இருந்தார்—

கல்கத்தாக்காரரான இந்த ரூபாகங்குலியைப் பற்றிய சில விவரங்களை நம ரசிகர்களுக்காக இங்கே திரட்டித் தருகிறோம—

ரூபாகங்குலி பல வருடங்கள்



ரூபா க்ஙகுளி

அனுபவம பெற்ற பழுத்த நடிகையோ பிலிம இன்ஸ்டியூட் போன்ற நடிப்பு கல்லூரியில் பயின்று நடிகையாக மாறியவரோ அல்ல—

1986 ஆம ஆண்டில் எதிர்பாராத விதமாக கல்லூரி படிப்பு முடித்த இளம ரூபாவின் மடியில் தானாக வந்து விழுந்தது நடிப்பு என்ற வாய்ப்பு—

இவர் கல்கத்தாவில் வசிக்கும கங்குலி என்ற நடுத்தர பிரிவைச் சேர்ந்த பெரிய நிறுவனத்தில் பணிபுரியும அதிகாரி ஒருவரின் மூத்த மகள்—

ரூபாவின் குடும்ப நண்பரான பட அதிபர் பிஜாய் சட்டர்ஜி என்பவர் தாகூரின் கதைகளை டிவி தொடருக்காக படம எடுக்க முடிவு செய்திருந்த போது ரூபாவை அந்த தொடர் நிகழ்ச்சியில் நடிக்கிறாயா என்று கேட்டார்—


முதல் முதலாக தாகூரின் கதாபாத்திரமாக டிவியில் நிரூபமாக ரூபா நடிக்க அதை கல்கத்தா வாசிகள் வெகுவாக ரசிக்க ரூபாவுக்கு தானாக வந்து சேர்ந்தது "மனஷி" என்ற சினிமாப் படவாய்ப்பு—

நடிப்பு பற்றி கனவு கூட காணாத தன்னை சினிமா உலகம பிடித்து கொண்டவுடன் ரூபா தன் திறமைகளை ஒவ்வொன்றாக வளர்த்து கொள்ள முடிவு செய்தார்—

அதுவரை நடிப்பு என்ற பெயரில் பள்ளி நாடகங்களிலோ மேடைகளிலோ தோன்றாதவரான ரூபா தனக்கு கடவுள் கொடுத்த வரம தான் இந்த நடிப்பு என்ற நமபிக்கையுடன் நடிப்பை ஒரு சவாலாக ஏற்று

ஒவ்வொரு பாத்திரத்தின் தன்மையையும மனதில் பதிய வைத்து பலமுறை வீட்டிலேயே நடித்துப் பார்த்து தன் நடிப்பு திறமையை வளர்த்துக் கொண்டு வங்காளப் படவுலகில் கிடுகிடு வென்று வளர்ந்து விட்டார்—

(இ—10)



# காடு அழிப்பால் புத்தளம் தொகுதியில் மழை வீழ்ச்சி குறைவு

புத்தளம மார்ச் 28

புத்தளம தொகுதியில் திட்டமிடப்படாத முறையில் காடுகள் அழிக்கப்படுகின்றன— இதனால் இப்பகுதியில் மழை வீழ்ச்சி குறைந்து விரைவில் இப்பகுதி பாலைவனமாக மாறும அபாயம தோன்றி உள்ளது—

இதனை உடனடியாக நிறுத்தி பாலைவனமாக புத்தளம பிரதேசம மாறுவதை தடுத்து நிறுத்த வேண்டும—

இவ்வாறான கோரிக்கை அடங்கிய மகஜர் ஒன்று அண்மையில் நடைபெற்ற மூன்றாவது ஜனாதிபதி நடமாடும சேவைத் திட்டத்தின் போது கையளிக்கப் பட்டது—

புத்தளம வட்டுக்காவளி உடையாவளி விவசாயிகள் சங்கத்தின் சார்பாக அதன் செயலாளர் ஜனாப் எம ஐ எம அப்துல் லத்தீப் இந்த மகஜரை நீர்ப்பாசன மகாவலி அபிவிருத்தி அமைச்சர் திரு பீ தயாரட்ணவிடம கையளித்தார்—

அமமகஜரில் மேலும கூறப் பட்டுள்ளதாவது—

காடுகள் அழிக்கப்பட்டு வருவதினால் புத்தளம தொகுதியில் மழை வீழ்ச்சி பெரிதும குறைந்துள்ளது—

விவசாயம செய்யப்படும பிரதேசமான மீஓயாப் பகுதியில் விவசாயம குறைந்துள்ளது—

மீஓயா ஆற்றில் நீர் குறைந்துள்ளதுடன் இருக்கும நீரும உவர்த் தன்மையாக மாறுகின்றது—

எனவே மகாவலி கங்கையை மீஓயாவுடன் இணைக்க வேண்டும— இவ்வாறு இணைப்பதன் மூலமும களனி கங்கையை வடக்கே திருப்பி (அப்பகுதி வெள்ள அபாயத்தை தவிர்ப்பதுடன்) மஹாஓயா — தெதுறு ஓயா ஆகியவற்றை மீஓயாவுடன் இணைப்பதன் மூலமும கரையோரப் பகுதியை வளமபடுத்தலாம—

இவ்வாறு அமமகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது—

இதுபற்றி ஆராய்ந்த அமைச்சர் இதுபற்றிய ஆய்வுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார்—

(இ—241)

## மட்டக்களப்பு சம்பந்தமான வரலாற்று பதிவுகளை பேண வேண்டுகோள்

மட்டக்களப்பு மார்ச் 28

மட்டக்களப்பு சம்பந்தமான வரலாற்று பதிவுகளைப் பேண நடவடிக்கை எடுக்குமாறு மட்டக்களப்பு மாநகர சபை ஆணையாளரிடம அரசாங்க அதிபர் வேண்டுகோள் விடுத்துள்ளார்—

இது தொடர்பாக பின்வரும் நடவடிக்கைகளை எடுக்குமாறு அவர் ஆலோசனை தெரிவித்துள்ளார்—

* மட்டக்களப்பு பொது நூலகத்தில் கிடைக்கும நாளேடுகள், சஞ்சிகைகள் முதலியவற்றில் மட்டக்களப்பு பற்றி பிரசுரமாகும கட்டுரைகளைச் சேகரித்தல்—

* இலக்கிய விழாக்கள், நூல் வெளியீடுகள் — கலாசார விழாக்கள் போன்றவற்றின் துண்டுப் பிரசுரங்களை திகதி வாரியாக பேணுதல்—

* மட்டக்களப்பு நூலகத்தில் நடைபெறும கலை இலக்கிய கூட்டங்களில் புகைப்படங்களைப் பேணுதல்— (இ—கு)

## மலையக மரக்கறிக்கு வவுனியாவில் தட்டுப்பாடு

வவுனியா மார்ச் 28

கண்டியிலிருந்து பெறப்படுகின்ற லீக்ஸ் கரட் கிழங்கு போன்ற மரக்கறி வகைகளுக்கு வவுனியாவில் தட்டுப்பாடு நிலவுகிறது—

தற்போது கிழங்கும கரட்டும யாழ் மாவட்டத்தில் இருந்து வவுனியாவிற்கு தாராளமாக வருவதனாலேயே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது—

யாழ்ப்பாணக் கிழங்கு ஒரு கிலோ 10 ரூபாவுக்கு (மொத்த விலையில்) கிடைக்கின்றது— இதே போல 10 — 12 ரூபாவுக்கு யாழ் கரட்டும கிடைக்கின்றது—

கண்டியில் இருந்து கிடைக்கும கிழங்கின் மொத்த விலை 16 ரூபாவும அதற்கு மேலாகவும விற்கப்படுகின்றது— கரட்டின் நிலைமையும அதேதான்—

இதனால் அங்கிருந்து வரும லீக்ஸையோ அல்லது கோவாவையோ கொண்டு வருவதற்கு வியாபாரிகளுக்கு கட்டுப்படியாகவில்லை என்று கூறப்படுகிறது—

தென் பகுதி காய்கறி லொறிகளின் வருகை குறைந்திருக்கிறது— அதன் காரணமாக லீக்ஸுக்கு வவுனியா சந்தையில் பெரும தட்டுப்பாடு நிலவுவதாக வர்த்தக வட்டாரங்கள் தெரிவித்தன—

(இ—101)

## மருதங்கேணியில் கமநல சேவை நிலைய அலுவலகம்

பளை, மார்ச்— 28

வடமராட்சி கிழக்கில் கமநல சேவை நிலையத்தின் உப அலுவலகமும உரக் களஞ்சியமும மருதங்கேணியில் அமைக்கப்படவுள்ளன—

யாழ் மாவட்ட கமநல சேவை நிலைய உதவி ஆணையாளர் திரு சிவசுவாம இதற்கான நடவடிக்கையினை மேற்கொண்டு வருகின்றார்—

மருதங்கேணியில் இக் கட்டடங்களை அமைப்பதற்கான காணியினை தந்துதவுமாறு வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் திரு வீ சந்திரசேகரத்தினை யாழ் மாவட்ட கமநல சேவை நிலைய உதவி ஆணையாளர் கேட்டுள்ளார்

(இ—289)

## தமிழ் தின போட்டி சாந்த மரியாள் முதலிடம்

கேகாலை, மார்ச் 28

கேகாலை மாவட்ட தமிழ் மொழித் தினப் போட்டிகளில் 'கேகாலை சாந்த மரி

ஆடம்பரத்திற்கும் அலங்காரத்திற்கும்

மின்சாரம் பாவிப்பதை மக்கள் குறைக்க வேண்டும்



அவலட்சணத்துக்கு அழகூட்டுவது அலஙகாரம, அதைப் பண்ணிக்கொண்டுதான் பெண்கள் காட்டுகிறார்களோ அகஙகாரம அதனால்தான் விஜயகாந்த் ஆடல் அழகியின் அலஙகாரத்தை களைத்து அமலாவின் அழகை மட்டும பார்த்து ரசிக்கப் போகிறாரோ?
[படம- புதுப்பாடகன்] (இ-10)

## சத்யராஜின் மைனர் விளையாட்டில் கௌதமி!

எவரெஸ்ட் பிலிமஸ் சார்பில் கலைமணி தயாரிக்கும "மல்லு வேட்டி மைனா" படத்தில் சத்யராஜ் "மைனர் ராசப்ப கவுண்டர்" என்ற வித்தியாசமான வேடத்தில் நடிக்கிறார்-

பழைமை விருமபியான அவர் தினமும வண்டி கட்டிக் கொண்டு தாசி வீடு செல்வது வழக்கம- அங்கு தாசிப் பெண்ணை பாட சொல்லி கேட்டு ரசிப்பார்-

பக்கத்து கிராமத்துக்கு புதிதாக யாரோ குடிவந்த இருப்பதாக கேள்விப்பட்டு அங்கு செல்கிறார்-

அங்கு டீச்சர் கௌதமியும, அவருடைய சித்தி - சித்தப்பாவும வரவேற்கிறார்கள்-

வழக்குமாக நான் பாடச் சொல்லி கேட்டு ரசிப்பது வழக்கம- இப்ப நானே பாடப் போறேன்" என்று கூறிய சத்யராஜ் பாட ஆரமபித்தார்-

சத்யராஜின் நடவடிக்கையும வெளிப்படையான பேச்சும கௌதமியை கவர்ந்தது-

அவர் தாசிப் பெண் அல்ல- பள்ளிக்கூட ஆசிரியை- சத்யராஜ் அந்த வீட்டுக்கு வந்து போனதால் ஊரில் கௌதமியை பற்றி தவறாக பேச ஆரமபித்தார்கள்-

அநியாயமாக கௌதமிக்கு கெட்ட பெயர் ஏற்பட்டதை எண்ணி வருந்துகிறார்- சத்யராஜ் அதற்கு பரிகாரமாக கௌதமியையே திருமணம செய்து கொள்கிறார்-



கௌதமி

இப்படி ஒரு காட்சி "மல்லு வேட்டி மைனர்" படத்துக்காக சமீபத்தில் படமாக்கப்பட்டது-

இந்த படத்தின் படப்பிடிப்பு கோபி செட்டி பாளையத்தை சுற்றி உள்ள பகுதிகளில் நடைபெறுகிறது-

ஷோபனா - வினுசக்ரவர்த்தி, வெண்ணிற ஆடை மூர்த்தி, செந்தில் - சின்னிஜெயந்த் ஆகியோரும நடிக்கிறார்கள்-

கதை - திரைக்கதை - வசனம எழுதி பிரமாண்டமான முறையில் தயாரிக்கிறார் கலைமணி-

மனோபாலா டைரக்ட் செய்கிறார்-

இளையராஜா இசை அமைக்க பி ஆர் விஜயலட்சுமி ஒளிப்பதிவு செய்கிறார்-

(இ—10)

## மக்கள் தீர்ப்பில் சசிகலா... சித்ரா

"மக்கள் தீர்ப்பு" என்ற புதிய படத்தில் ராஜசேகருடன் சசிகலா, சித்ரா நடிக்கிறார்கள்-

"இதுதான்டா பொலீஸ்" படத்தில் நடித்த டாக்டர் ராஜசேகர் முற்றிலும மாறுபட்ட வேடத்தில் நடிக்கும படம "மக்கள் தீர்ப்பு"-

தொடரவில்லன் வேடத்தில் சரண்ராஜும, புரட்சி பெண்களாக சித்ரா - சசிகலாவும நடிக்கின்றனர்-

ராஜா என்ற துடிப்பான இளைஞன் வேடமேற்ற ராஜசேகர் நடிக்கிறார்-

இப்படம விரைவில் திரைக்கு வரும- (இ—10)

தினபதி சினிமா

## ஜனாதிபதி உரை

புத்தளம மார்ச் 28

"மின்சாரத்தை மக்கள் ஆடமபரத்திற்கும, அலஙகாரத்திற்கும பாவிப்பதைக் குறைத்து அதனை அபிவிருத்திக்காகவும, உற்பத்திக்காகவும பயன்படுத்த வேண்டும."

ஜனாதிபதி ஆர் பிரேமதாசா இவ்வாறு தெரிவித்தார்.

புத்தளம மாவட்டத்தைச் சேர்ந்த "வண்ணாத்திவில்லு" என்னும கிராமத்திற்கு புதிய மின் இணைப்பு அங்குரார்ப்பண வைபவம நடைபெற்றது.

இவ்வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சுமார் ஒரு கோடி 45 லட்சம ரூபா செலவில் இந்த மின் இணைப்புத் திட்டம பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

ஜனாதிபதி அங்கு தொடர்ந்து உரையாற்றும போது கூறியதாவது—

"மின் சக்தியை அளவோடு பாவிப்பதன் மூலம பணத்தை சேமிக்க வேண்டும. ஆடமபரத்தையும, வீண்விரயத்தையும தவிர்த்து உற்பத்திக்கும, அபிவிருத்திக்கும முக்கிய இடத்தை கொடுக்க வேண்டும என்றார்-

( ஐ-241)

ளில் கேகாலை சாந்த மரியாள் தமிழ் மகா வித்தியாலய மாணவ. மாணவிகள், இசை (வில்லுப்பாட்டு) நாடகம ஆகிய இரு போட்டிகளிலும முதலிடத்தைப் பெற்றுக் கொண்டனர்-

மலையக பழமபெரும கலையான "காமன்கூத்து" நிகழ்ச்சிக்கே மேற்படி முதலிடம கிடைத்தது என்பது இஙகு குறிப்பிடத்தக்கது- (இ-197)

## சமாதான மாநாடு நுவரெலியாவில் ஏப்ரல் 7 முதல் 9 வரை

கொழுமபு, மார்ச்- 29

சர்வதேச அனைத்து மதஙகளின் சமாதான மாநாடு அடுத்த மாதம நுவரெலியாவில் நடைபெறும-

இந்த சமாதான மாநாட்டிற்காக உலகம முழுவதிலும உள்ள 115 சர்வதேச அமைப்புக்களும 250 மத முக்கியஸ்தர்களும அழைக்கப்பட்டிருக்கிறார்கள்

அரசியல் சார்பற்ற முறையில் நடைபெற இருக்கின்ற இம மாநாடு ஏப்ரல் மாதம 7 ஆம திகதியில் இருந்து 9 ஆம திகதி வரைக்கும நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன-

பின்வரும 4 நோக்கஙகளுக்காக இந்த மாநாடு கூட்டப்படுகிறது- உலகத்தில் உள்ள மதஙகளினூடாக நாடுகளுக்கிடையில் சமாதானத்தை உருவாக்குவது;

உலக மதஙகளுக்கிடையில் ஒற்றுமையை ஏற்படுத்துவதோடு அதனூடாக சமாதானத்தை நிலைநாட்டுதல்;

இளைஞர்களிடையே மத நமபிக்கைகளை கொண்டு வருவதோடு அவர்களுக்கு மத போதனைகளையும ஏற்படுத்துவது;

மதஙகளினூடாக இனக் கலவரஙகள் ஏற்படுவதை தடுப்பதோடு சமாதான சக வாழ்வை கொண்டு வருதல்:

பிரதமர் டி பி விஜேதுஙக, இந்த சமய, இந்த கலாசார ராஜாங்க அமைச்சர் திரு பி பி தேவராஜ் மற்றும வெளிநாட்டு உள்நாட்டு பிரதிநிதிகள் இம மாநாட்டில் கலந்து கொள்வார்கள்-

(ஐ-கு)


## தமிழ் நூல்களும் இஸ்லாமிய நூல்களும்

இலங்கையிலும் வெளிநாட்டிலும் அச்சிடப்பட்ட தமிழ் - இஸ்லாமிய நூல்கள் தொடர்பான உங்கள் தேவைகளுக்கு விஜயம் செய்யுங்கள்



எம். டி. குணசேன அன்ட் கம். லிமிட்.

217. ஒல்கொட் மாவத்தை
கொழும்பு—11
தொலைபேசி- 23981—8

தினபதி

தந்தி "தினபதி" கொழும்பு
தொலைபேசி
23882, 23884, 23864
தபால் பெட்டி இல 1613

சுடர் 18 கதிர் 4447
— 1990 மார்ச் 30 —

# பிறவிப் பிணிக்கு மருந்து பக்தியின் மூலம் தான்

## ஆண்டவன் அருள் இருந்தால் எண்ணங்கள் நிறைவேறும்

— வைரம் ராஜகோபால் —

பகவான் ஒருவன்தான் சுதந்திரன்— அவன் இஷ்டப்படி எதையும் செய்வான்— அவனை யாரும் கட்டுப்படுத்த முடியாது—

நாமெல்லாம் சுதந்திரமில்லாதவர்கள்— நம இஷ்டப்படியெல்லாம் எதையும் செய்துவிட முடியாது— அவனது அருள் இருந்தால் நம எண்ணங்கள் நிறைவேறும— இல்லையேல் வீண் பிரயாசை அலைச்சல் சிரமம் செலவு எல்லாம ஏற்படும,

அதனால் நாம பகவானை வழிபடலாம— பக்தி செய்யலாம அவனாக ... சந்தோஷப்பட்டு நமக்கு எது நல்லதோ அதை அவனே கொடுக்கிறான்—

நாம எதையெதையோ கேட்கிறோம— பகவானிடம லௌகீக லாபங்களை வேண்டி நிற்பது அறியாமை என்றார்கள், பரமாத்மாவிடம் கிடைத்தற்குரிய மோட்ச சாமராஜ்யத்தை அல்லவா கேட்க வேண்டும—

கொடுப்பதும கொடுக்காததும அவன் விருப்பத்தைப் பொறுத்தது— நமது தகுதியைப் பொறுத்தது— நாமாக அதைக் கொடு, இதைக் கொடு என்று கேட்க உரிமையில்லை—

அவனாகவே நமக்கு எது நல்லதோ அதைக் கொடுப்பான் அது நமது வினைப் பயன் பக்தி விசுவாசம இவைகளைப் பொறுத்தது—

நாராயண பட்டதிரி என்கிற மகான் குருவாயூரில் ஸ்ரீ குருவாயூரப்பன் சந்நிதியில் உட்கார்ந்து கொண்டு "குருவாயூரப்பா நீதான் எனக்குக்கதி" என்று சொல்லி நாராயணீயம என்ற 1034 சுலோகங்களை எழுதினார்—

பகவானுடைய மச்சாவதாரத்திலிருந்து கிருஷ்ணவதாரம ருக்மணி கல்யாணம வரை ஸ்லோகங்களாக எழுதினார்—

ஒவ்வொரு சுலோகம எழுதினதும "இது நிஜமதானா?" என்று பகவானைக் கேட்பார்— பகவானும "ஆமாம" என்று தலையசைப்பார்—

இப்படிப் பகவானால் அங்கீகாரம செய்த பிறகே அடுத்த சுலோகத்தை எழுதுவார்— இப்படி எழுதிக்கொண்டே வரும போது பகவான் பலமுறை அவருக்கு [illegible] சக்ர தாரியாக தரிசனம கொடுத்தார்—

இந்த ஸ்ரீ நாராயண பட்டதிரிக்கு வந்த ரோகம கடுமையாக இருந்தது— பகவானைக் குறித்து சுலோகங்கள் எழுதும போது இந்த வாதம ரோகம அவரை உபத்ரவம் செய்யும—

அதனால் தன் பக்திக்கும பகவானிடம மனதை வைக்க முடியாமலும் இடையூறாக இருந்தது—

அதனால் அவர் பகவானைப் பார்த்து "ஹே குருவாயூரப்பா இந்த வாதரோகம உன்னிடம மனதை வைக்க முடியாமல் இடையூறு செய்கிறதே! இந்த வாத ரோகத்தைப் போக்கி வைக்க வேண்டும" என்று வேண்டுவார்—

அதாவது இவர் வேறு எதையும வேண்டவில்லை— "உன்னிடம பக்தி செய்ய விடாமல் தொந்தரவு செய்யும வாத ரோகத்தைப் போக்கு" என்று தான் வேண்டினார்—

வாத ரோகம போய் விட்டால் இடையூறு எதுவுமின்றி பக்தி செய்யலாம— அவனது குணாதிசயங்களில் மனதைப் பறிகொடுக்கலாம— அவனைக் குறித்த சுலோகங்களை எழுதி முடிக்கலாம என்பது அவரது எண்ணம—

ஆனால் பகவான் உடனே வாத ரோகத்தைப் போக்கவில்லை— கடைசியில்தான் போக்கினார்— அதற்கான காரணத்தையும அப்போதுதான் சொன்னார்—

வாத ரோகம நிவர்த்தியானதும நீ சுலோகம எழுதுவதை விட்டு விட்டால் என்ன செய்வது?

அதனால்தான் சுலோகங்கள் எழுதி முடியுமவரையில் உன் வாத ரோகத்தைப் போக்காமலிருந்து இப்போது போக்கினேன்" என்றார்—

### வெள்ளி விருந்து

எப்படியோ சிரமப்பட்டுக் கொண்டே நாராயணீய சுலோகங்களை எழுதி முடித்தார்— கடைசியாக பகவான் வைகுண்ட தரிசனம கொடுத்தார்—

பட்டதிரி அதையும சுலோகமாக எழுதிவிட்டு கீழே விழுந்து நமஸ்காரம செய்தார்—

நமஸ்காரம செய்யுமபோது வாதரோகம இவரை குனிய விடாமல் கை கால்களை சரியாக நீட்ட முடியாமல் இருந்தது— எப்படியோ சிரமப்பட்டு நமஸ்காரம செய்த பிறகு "வெடுக்"கென்று துடிதுடிப்புடன் எழுந்து விட்டார்— வாதரோகம போயே போய் விட்டது!

அப்போதுதான் ஸ்ரீகுருவாயூரப்பன் "ஏ பட்டதிரி! உன் வாத ரோகத்தை நான் ஆரம்பத்திலேயே போக்கியிருப்பேன், ஆனால் அப்படிச் செய்திருந்தால் இந்த "நாராயணீயம" என்கிற சுலோகங்களைக் கேட்கும பாக்யம எனக்குக் கிடைத்திருக்காதே!

பக்தர்களுக்கும இந்த சுலோகங்கள் கிடைத்திருக்காதே!!

பட்டதிரி கண்ணீர் விட்டுக் கதறினாராம! "ஹே குருவாயூரப்பா! என்னே உன் கருணை, இந்த சுலோகங்களை யார் படிக்கிறார்களோ, கேட்கிறார்களோ அவர்களுக்கெல்லாம "ஆயுள் ஆரோக்கியம சௌக்கியம" இவைகளை அருள வேண்டும" என்று வேண்டிக் கொண்டாராம!

பகவானும அப்படியே அனுக்கிரகம செய்தாராம— சிலகாலம சென்ற பின் பட்டதிரி வைகுண்டம சென்றதாக சரித்திரம!

ஆக பகவானிடம பக்திக்கு சாதனமான விஷயங்களைப் பிரார்த்திப்பதே உசிதமானது! பக்தியின் மூலமாகத்தான் பிறவிப் பிணிக்கு மருந்து கிடைக்கும— பிணியும தீரும—

பகவானிடம பணம் பொருள் என்றெல்லாம கேட்காமல் "உன் பொன்னடியையே போற்றக்கூடிய பக்தியை அருள வேண்டும" என்று பிரார்த்திப்பது நல்லது!

[ம—10]

### அடகு நகைகள்

கல்முனை, கஞ்சிகுடிச்சாறு, காரைதீவு, சம்மாந்துறை, நிந்தவூர், அக்கரைப்பற்று, திருக்கோவில், பொத்துவில் ஆகிய பகுதிகளில் உள்ள மக்கள் வங்கிகளிலும கிராம வங்கிகளிலும நகைகளை அடகு வைத்தவர்கள் அவற்றைத் திருமபப் பெற முடியாமல் தவிக்கிறார்கள்.

நகைகளை அடகு வைத்துப் பெற்ற தொகையையும அதற்குரிய வட்டியையும செலுத்தி விட்டு நீண்ட காலமாக நகைகளுக்காகக் காத்திருக்கிறார்கள்.

வடக்கு கிழக்கில் முன்னர் பாதுகாப்பற்ற நிலைமை இருந்ததால் அடகு நகைகள் முழுவதும கொழுமபுக்குக் கொண்டு வரப்பட்டு விட்டன. வடக்கிலும கிழக்கிலும இப்போது நிலைமை மாறி விட்டது.

நீண்ட காலமாக மூடிக் கிடந்த வங்கிகளும அரைகுறையாக அவ்வப்போது செயற்பட்டு வந்த வங்கிகளும இப்போது வழமை போல் அலுவல்களில் ஈடுபட்டு வருகின்றன.

ஆயின், பாதுகாப்புக் கருதிக் கொழுமபுக்குக் கொண்டு வரப்பட்ட அடகு நகைகள் பிரதேச வங்கிகளுக்குக் கொண்டு போய் — —உரியவர்களுக்கு வழங்குவதில் என்ன [illegible] இருக்கிறது?]

நகைகளை அடகு வைத்தவர்கள் ஜனாதிபதிக்கு முறைப்பாடு செய்திருக்கிறார்கள். எதிர்வரும தமிழ் — சிங்களப் புத்தாண்டுக்கு முன்னர் நகைகளைத் திருப்பிக் கொடுக்கும படி வங்கிகளுக்கு உத்தரவு பிறப்பிக்குமாறு அவர்கள் ஜனாதிபதியைக் கேட்டிருக்கிறார்கள்.

தமிழ் — சிங்களப் புத்

## நுவரெலியா நகர் புதுப் பொலிவு பெறுகிறது

நுவரெலியா, மார்ச்— 28

நுவரெலியா நகர் வசந்த காலத்தை முன்னிட்டு புதுப் பொலிவு பெற்று வருகிறது—

நுவரெலியா அரசாங்க அதிபர் கலாநிதி டட்லி திஸாநாயக்கா, மேயர் திரு பந்துல சேனவிரத்ன ஆகியோரின் நடவடிக்கைகளினால் இம மாற்றம ஏற்பட்டு வருகிறது—

கடைகள் அனைத்தும துப்புரவு செய்யப்பட்டு புதிதாக வர்ணம தீட்டப்படுகின்றன—

வீதிக்கு ஒரு வர்ணம என்ற ரீதியில் வர்ணம தீட்டப்படுவ

## வருடாந்த உத்தர உற்சவம்

கேகாலை, மார்ச் 28

கேகாலை — கோலிந்தா தோட்டம 3 ஆம பிரிவிலுள்ள ஸ்ரீ முத்து விநாயகப் பெருமான், ஸ்ரீ சுப்ரமணியர் ஆலய வருடாந்த பஙகுனிஉத்தர உற்சவம எதிர்வரும ஏப்ரல் மாதம 7 ஆம திகதி கொடியேற்றத்துடன் ஆரமபமாகி 10 ஆம திகதி தீர்த்த உற்ச

## சப்ரகமுவ பகுதிகளில் ஆரம்பக் கல்வி பெருமளவில் பாதிப்பு

—, அமைச்சாளர் உரை

கேகாலை, மார்ச்— 28

"கடந்த பத்தாண்டு காலமாக தோட்டத் துறையில் குறிப்பாக சப்ரகமுவ, குரு

ச்சியில் பெற்றோரின் பஙகளிப்பு என்ற தலைப்பில் கேகாலை கோலிந்தா தோட்ட தமிழ் வித்தியாலயத்தில் இடமபெற்ற கருத்தரங்கில் கலந்து கொண்டு உரை

### செய்தித் திரட்டு

#### வீட்டுத்தோட்ட பயிர்ச் செய்கை

நாத்தாண்டி, மார்ச் 28

வீட்டுத் தோட்டப் பயிர்ச் செய்கையில் போட்டி ஒன்றை நடத்துவதற்கு வடமேல் மாகாண சபை நடவடிக்கை எடுத்து வருகிறது—

இதன் மூலம மக்களிடையே வீட்டுத் தோட்டச் செய்கையில் ஆர்வத்தை ஏற்படுத்த முடியுமென மாகாண சபை எதிர்பார்க்கிறது—

உதவி அரசாங்க அதிபர் பிரிவு மட்டத்தில் இப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன—

வெற்றி பெறும தோட்டச் செய்கையாளர்களுக்கு பெறுமதி மிக்க பரிசுகளும சான்றிதழ்களும வழங்கப்படவுள்ளன—

[ஐ—225]

#### பாடசாலைக்கு 5 ஏக்கர் காணி

அட்டன், மார்ச் 28

அட்டன் ஹைலன்ட்ஸ் மகா வித்தியாலயத்திற்கு அட்டன் டன்பார் தோட்டத்தில் ஐந்து ஏக்கர் காணி வழங்கப்பட்டுள்ளது—

இத் தகவலை மேற்படி வித்தியாலய அதிபர் திரு ஏ எஸ் குமார, "தினபதி"க்குத் தெரிவித்தார்—

இக் காணியில் சீடா நிறுவனத்தின் உதவியைக் கொண்டு புதிய கட்டிடங்கள், விளையாட்டு மைதானம என்பன நிர்மாணிக்கப்படும என்றும அவர் கூறினார்—

[ஐ—096]

#### அரச அதிபர் கடிதம்

மட்டக்களப்பு, மார்ச் 28

இலக்கியக் கூட்டங்களில் ஆசிரியர்களும, உயர் வகுப்பு மாணவர்களும கலந்து கொள்ள ஆவன செய்யுமாறு மட்டக்களப்பு அரசாங்க அதிபர் திரு ஆர் யோகநாதன் பிரதி கல்விப் பணிப்பாளரைக் கேட்டுள்ளார்—

பிரதி கல்விப் பணிப்பாளர் திரு கே சோமசுந்தரத்துக்கு அரசாங்க அதிபர் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் —

இலக்கியக் கூட்டங்களில் இடமபெறும உரைகளில் ஆசிரியர்களுக்கும மாணவர்களுக்கும பயன்படக் கூடிய பல தகவல்கள் இடமபெறுவது வழக்கம—

எனவே இக் கூட்டங்களில்

படி வங்கிகளுக்கு உத்தரவு பிறப்பிக்குமாறு அவர்கள் ஜனாதிபதியைக் கேட்டிருக்கிறார்கள்.

தமிழ் - சிங்களப் புத்தாண்டை ஜனாதிபதி தேசியப் புத்தாண்டாகப் பிரகடனம் செய்திருக்கிறார்.

புது வருடத்தை எல்லோரும் நன்றாகக் கொண்டாட வேண்டும் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

புது வருடத்தைச் சிறப்பாகக் கொண்டாடுவதற்குப் பெண்கள் தமது நகைகளை அணிய விரும்புவார்கள்.

ரமழான் நோன்பும் ஆரம்பமாகி விட்டது. நோன்புப் பெருநாளைக் கொண்டாடும் போது முஸ்லிம் பெண்கள் தமது நகைகள் தம்மிடம் இருக்க வேண்டும் என்று தானே விரும்புவார்கள்!

ஆகவே நகைகளை அடகு வைத்த தமிழர்கள், முஸ்லிம்கள், சிங்களவர்கள் அனைவரும் தங்கள் நகைகள் எதிர்வரும் தமிழ் - சிங்கள புத்தாண்டுக்கு முன்னர் திருப்பித் தரப்பட வேண்டும் என்று கோருவதில் எவ்வளவோ நியாயம் இருக்கிறது.

பெரும்பாலும் விவசாயிகளே பயிர்ச் செய்கைக்குக் கடன் பெறுவதற்காக நகைகளை அடகு வைக்கிறார்கள். அறுவடைக் காலத்தில் நகைகளை மீட்டு விடுகிறார்கள். அதில் அவர்களுக்கு திருப்தியும் மகிழ்ச்சியும் ஏற்படுகின்றன.

அவர்கள் கேட்பதெல்லாம் மேலும் தாமதமின்றி அடகு நகைகளைத் திருப்பித் தாருங்கள் என்பதுதானே. அவர்கள் விஷயத்தை ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு வந்து விட்டார்கள். அதனால் காரியம் கைகூடும் என்று நம்புகிறோம்.

பொலிவு பெற்று வருகிறது.

நுவரெலியா அரசாங்க அதிபர் கலாநிதி டட்லி திஸாநாயக்கா, மேயர் திரு பந்துல

## விவசாயிகளுக்கு பயிற்சி முகாம்

திருகோணமலை, மார்ச் 28

வடக்கு கிழக்கு மாகாணத்திலுள்ள இளம் விவசாயிகளுக்குப் பயிற்சி முகாம் ஒன்றினை நடத்துவதற்கு மாகாண காணி விவசாய அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகிறது.

புதிய பதில் செயலாளர் டாக்டர் என் விக்னராசா இத் தகவலைத் தெரிவித்தார்.

சர்வோதய இயக்கத்தின் அனுசரணையுடன் நடத்தப்பட உள்ள இந்தப் பயிற்சி முகாம் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 23 ஆம் திகதி முதல் மூன்று வாரங்களுக்கு நடைபெறும். [ஐ—288]

## கிண்ணியா பகுதி பள்ளிகளுக்கு பேரீச்சம்பழம்

கிண்ணியா, மார்ச் 28

நோன்பு காலத்தை முன்னிட்டு சவூதி அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட பேரீச்சம்பழம் கிண்ணியா பிரதேச பள்ளிவாசல்களுக்கும் வழங்கப்பட்டது.

வர்த்தக கப்பற்துறை அமைச்சர் ஜனாப் ஏ ஆர் மன்சூர் அண்மையில் கிண்ணியாவிற்கு திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டு இதனை வழங்கினார்.

கிண்ணியா ஜாவுப் பள்ளிவாசலில் இவ்வைபவம் சிறப்பாக நடைபெற்றது.

திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாப் எம் ஈ எச் மஹ்ரூப்பும் இவ் வைபவத்தில் கலந்து கொண்டார். (இ-151)

ஏற்பட்டு வருகிறது.

கடைகள் அனைத்தும் துப்புரவு செய்யப்பட்டு புதிதாக வர்ணம் தீட்டப்படுகின்றன.

வீதிக்கு ஒரு வர்ணம் என்ற ரீதியில் வர்ணம் தீட்டப்படுவதைக் காணக் கூடியதாக இருக்கிறது.

நடை பாதைகளில் வியாபாரம் செய்து வந்த அங்காடிகளுக்குப் புதிய இடம் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை புதிய பொலீஸ் பயிலுநர்களுக்கு வீதி விதிமுறை பயிற்சிகள் நகர் வீதிகளில் அளிக்கப்படுகின்றது.

சுமார் இருபதுக்கு மேற்பட்ட பொலீஸாரை வீதிகளில் காணக் கூடியதாக இருக்கின்றது. (ஐ-412)

மான், ஸ்ரீ சுப்ரமணியர் ஆலய வருடாந்த பங்குனிஉத்தர உற்சவம் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 7 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 10 ஆம் திகதி தீர்த்த உற்சவத்துடன் நிறைவுபெறும்.

8 ஆம் திகதி காவடி பாலித்தல் நிகழ்ச்சியும் 9 ஆம் திகதி இரவு அலங்காரப் பவனியும் இடம்பெறும்.

10 ஆம் திகதி அன்னதானமும் இடம்பெற உள்ளது. விசேட சமய சொற்பொழிவுகளும் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும். [ஐ—197]

## —, அமைப்பாளர் உரை

கேகாலை, மார்ச் 28

"கடந்த பத்தாண்டு காலமாக தோட்டத் துறையில் குறிப்பாக சப்ரகமுவ, குருநாகல், களுத்துறை போன்ற பகுதிகளில் ஆரம்பக் கல்வி பெருமளவில் பாதிக்கப்பட்டு வருகிறது. இந்நிலை நீடிக்கும் பட்சத்தில் இன்னும் பத்தாண்டு காலப் பகுதியில் முலையகக் கல்வி நிலை மேலும் மோசமடையும்

சமூக பொருளாதார அபிவிருத்தி கேகாலை வட்டார அமைப்பாளர் திரு அம்பன்பிட்டிய பிரேமநாதன் இப்படி கூறினார்.

"பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் பெற்றோரின் பங்களிப்பு என்ற தலைப்பில் கேகாலை கோலிந்தா தோட்ட தமிழ் வித்தியாலயத்தில் இடம்பெற்ற கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே திரு பிரேமநாதன் மேற்கண்டவாறு கூறினார்.

மேற்படி கல்லூரி முதல்வர் ஜனாப் எஸ் எம் நயுமுதீன் தலைமையில் நடைபெற்ற மேற்படி கருத்தரங்கில் அவர் தொடர்ந்து பேசியதாவது:—

பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பி வைப்பதில் தோட்டப் பெற்றோர் காட்டும் அலட்சியப் போக்கு, பொருளாதாரக் கஷ்டம், பாடசாலைகள் ஒழுங்காக இயங்காமை, ஆசிரியர்கள் பள்ளிக்கு ஒழுங்காக வராமை, சீரற்ற நிர்வாகம், தளபாட வசதியின்மை போன்ற காரணங்களால் தோட்டப்புறக் கல்வி பாதிக்கப்பட்டு வருகிறது.

தோட்டப் பாடசாலைகளில் சமயக் கல்வி போதிக்காதபடியால் பிள்ளைகளின் ஆன்மீக வளர்ச்சி குன்றி வருவதையும் அவதானிக்க வேண்டும். பெண் பிள்ளைகள் வெளியார்களால் வேலைக்காரர்களாக அமைத்துச் செல்லப்படுகிறார்கள் இதன் மேலாக பெண் கல்வியும் குறிப்பிடத்தக்க அளவில் குன்றி வருகிறது.

இவ்வாறான காரணங்களை அசைசீக்கு சொல்லப்பட வேண்டிய காலம் வந்துவிட்டது.

இப்படி திரு பிரேமநாதன் கூறினார்.

வித்தியாலய அதிபர் ஜனாப் எஸ் எம் நயமதீன் பேசுகையில் மலையக கல்வி வளர்ச்சிக்காக முஸ்லிம்கள் மனமுவந்து சேவையாற்ற வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

இக் கருத்தரங்கில் கேகாலை அபிவிருத்தித் தலைவர் கேகாலை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் திரு ஏ. உதயகுமார், கல்லூரி ஆசிரியர்களான திரு க... திரு இரா நித்தியானந்தன் ... மற்றும் பலர் உரையாற்றினர். (ஐ-197)

இலக்கியக் கூட்டங்களில் இடம்பெறும் உரைகளில் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் பயன்படக் கூடிய பல தகவல்கள் இடம்பெறுவது வழக்கம்.

எனவே இக் கூட்டங்களில் ஆசிரியர்களும் மாணவ, மாணவியரும் பங்குபற்றுதல் பயன் தரும் என்று குறிப்பிட்டிருக்கிறார். [ஐ—ங]

## எண்பதாவது பாடசாலை

பளை, மார்ச் 28

கிளிநொச்சி கல்வி மாவட்டத்தின் எண்பதாவது (80) பாடசாலை உருத்திரபுரம் தொத்தணியில் திறந்து வைக்கப்பட உள்ளது.

அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தினால் கட்டப்பட்டுள்ள ஊற்றுப்புலம் பாடசாலையே தற்போது அரசாங்கத்தினால் கையேற்கப்படவுள்ளது.

இப் பாடசாலை ஊற்றுப்புலம் கதிரவேலு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை என அழைக்கப்படும். [ஐ—239]

## வெளிநாட்டு கடிதங்கள் கிணற்றுக்குள்

வவுனியா, மார்ச் 28

மன்னார் தபால் நிலையம் செல்ல வேண்டிய நூற்றுக்கும் அதிகமான வெளிநாட்டுக் கடிதங்கள் வவுனியா தபால் நிலையக் கிணற்றினுள் கிடந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இக் கடிதங்கள் கிணற்றினுள் இருந்து வவுனியா தபால் நிலைய அதிகாரிகளினால் மீட்கப்பட்டுள்ளன.

இம்மாதம் இக் கடிதங்கள் மன்னார் மாவட்டத்தினைச் சேர்ந்த வெளிநாடுகளில் வசிப்பவர்களினால் தமது உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டு இருந்தன. [ஐ—101]

# புனித ரமழான் சிந்தனைகள்

எப். எம். பைரூஸ்

நாம் ரமழானின் சிறப்பை அறிவோமானால் ஆயுள் முழுவதும் ரமழானாக இருக்க மாட்டாதா! என்று தான் கேட்போம்.

அல்லாஹ்வுக்கு ரமழான் எமக்கு அளவிடற்கரிய நன்மைகளை ஏற்படுத்திக் கொடுக்கிறது

ரமழானின் ஆரம்பத்தில் சுவனவாயில்கள் திறக்கப்படுகின்றன. நரக வாயில்கள் யாவும் மூடப்படுகின்றன.

ஷைத்தான்களைப் பொறுத்தவரை அவற்றுக்கு விலங்கு இடப்படுகிறது.

நோன்பு நமது வழமையான வாழ்வில் பல மாற்றங்களை உருவாக்கி வருகிறது.

பதினொரு மாதங்கள் நாம் வாழ்ந்த வாழ்வுக்கும் ரமழான் நோன்பு மாதத்தில் நாம் வாழும் வாழ்வுக்கும் தான் எத்தனை மாற்றங்கள்?

புலன் உணர்வுகளை எல்லாம் நாம் ரமழானில் அடக்குகிறோம்.

இறை சிந்தனையிலேயே நான் முழுவதும் லயிக்கிறோம்.

ஆன்மீக வாழ்வு ரமழானில் உயிரோட்டம் பெறுகிறது.

சுருங்கக் கூறுவதானால் ரமழான் எம்மை முழுமைபெற்ற சிறந்த முஸ்லிமாக மாற்றுகிறது

நோன்பின் தத்துவம் பெரியது உணவையும், தாகத்தையும் தியாகம் செய்வது மட்டும் நோன்பாகாது.

இத்தகைய நோன்பால் ஒரு பலனும் இல்லை என்றே கொள்ள வேண்டும்.

இதனைத்தான் நபி (ஸல்) அவர்கள் நோன்பாளிகள் பலருக்கு நோன்பு பட்டினியைத் தவிர வேறு எதனையும் அளிப்பதில்லை என்றார்கள்.

ஆகவே —

எமது நோன்புகளை சிறந்த நோன்புகளாக்கிக் கொள்வோம்.

நல்ல அமல்களை அதிகம் அதிகம் புரிந்து அல்லாஹ்வின் "ரஹ்மத்" எனும் பேரருளைப் பெற்றுக் கொள்வோம்.

நோன்பின் மாண்பைக் கொண்டு அல்லாஹ் எமக்கு அருள் செய்வானாக!

ஆமீன்! ஆமீன்!! யாரப்பல் ஆலமீன்!!!

## ஆசிரியர்கள் பற்றாக்குறை

அட்டன், மார்ச் 28

அட்டன் ஹைலண்ட்ஸ் கல்லூரியில் சங்கீதம், நடனம், சித்திரம், விவசாயம் ஆகிய பாடங்களைக் கற்பிக்க கடந்த 1½ வருட காலமாக ஆசிரியர்கள் இல்லை.

மேற்படி நான்கு முக்கிய பாடங்களையும் கற்பித்து வந்த ஆசிரியர்கள் கடந்த ஆண்டு இடமாற்றம் பெற்றுச் சென்று விட்டனர். ஆனால் ஆசிரியர்கள் நியமிக்கப்படவில்லை. [ஐ—096]

லிதுவேனிய விவகாரம்

# ரஷ்ய தலையீட்டை தவிர்க்க குரல்

## சர்வதேச ரீதியில் எழுப்பும்படி ஜனாதிபதி வேண்டுகோள்

மாஸ்கோ, மார்ச் 29

**லிதுவேனிய குடியரசின் சொந்த விவகாரத்தில் ரஷ்ய தலையீட்டைத் தவிர்க்க சர்வதேச ரீதியில் குரல் எழுப்பப்பட வேண்டும். இவ் வாறு லிதுவேனிய ஜனாதிபதி வைடவ்டஸ் லாண்ட்ஸ் பேர்கிஸ் கேட்டிருக்கிறார்.**

ரஷ்ய ஆதிக்கத்திலிருந்து விடுபட்ட லிதுவேனியா கடந்த 11 ஆம் திகதி சுதந்திர பிரகடனம் செய்து கொண்டது. இந்தச் செயல் சட்டபூர்வமற்றது எனக் கூறிய ரஷ்யா சுதந்திர பிரகடனத்தை வாபஸ் பெறும்படி தெரிவித்தது.

இதற்கு லிதுவேனியா இணங்க மறுத்ததை அடுத்து ரஷ்ய துருப்புகள் அங்கு இப்போது பல இடங்களையும் கைப்பற்றியுள்ளன.

ரஷ்ய தாங்கிகளும் லிதுவேனியாவுக்குள் புகுந்திருக்கின்றன.

ரஷ்யாவின் செய்கையால் லிதுவேனியா அச்சம் கொண்டிருக்கிறது. அதனால் ரஷ்ய தலையீட்டைத் தவிர்க்க சர்வதேச நாடுகள் குரல் கொடுக்க வேண்டுமென கேட்கின்றது.

லிதுவேனியாவும் அவசரப்பட்டு காரியம் சாதிக்காமல் அமைதியாக இருக்கின்றது. லிதுவேனியா எல்லைப் பகுதிகளில் கட்டுப்பாடுகளை பலப்படுத்துவதில் அவசரப்பட மாட்டாது என ஜனாதிபதி லாண்ட்ஸ் பேர்கிஸ் பத்திரிகையாளர்களிடம் கூறினார். பாதுகாப்பு அமைச்சொன்றையும் தாம் இப்போதைக்கு அமைக்க மாட்டோம் என அவர் தெரிவித்திருக்கிறார்.

1975 ஆம் ஆண்டு ஹெல்சிங்கி ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. ஐரோப்பிய பாதுகாப்பு கூட்டுறவு குறித்த ஒப்பந்தம் "ஹெல்சிங்கி ஒப்பந்தம்" எனப்படுகிறது.

இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட எல்லா நாடுகளுக்கும் லிதுவேனிய ஜனாதிபதி உதவி கோரி கடிதங்களை புதன்கிழமை அனுப்பியுள்ளார். (எ)

உலகச் செய்திகள்

## காஷ்மீரில் பதற்றம் அதிகரிப்பு

புதுடில்லி மார்ச் 29

காஷ்மீரில் புதன்கிழமை பதற்றம் அதிகரித்ததால ஜம்மு, காஷ்மீரில் இருக்கும் எல்லா நகரங்களும் இந்திய இராணுவம் மற்றும் பாரா துருப்பினரின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டன.

முஸ்லிம்களுக்கும் இந்துக்களுக்குமிடையே பலத்த மோதல் ஏற்பட்டதையடுத்து இரவு ஊரடங்கும் அமுல் செய்யப்பட்டது.

நேற்று நடந்த மோதலில் பொலீஸார் சுட்டபோது இருவர் துப்பாக்கிக்கு இரையாகினார்கள்.

பாகிஸ்தான் எல்லைப் புறமாக இந்தியாவுக்குள் புகமுயன்ற கோஷ்டி ஒன்றின் மீது இந்திய எல்லைப் பாதுகாப்புப் படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

இது பற்றி இந்திய செய்தி ஸ்தாபனம் (யு என் ஐ) அறிவித்தது.

இதே வேளையில் தடை செய்யப்பட்ட இயக்கமான ஜம்மு காஷ்மீர் விடுதலை முன்னணியின் உறுப்பினர்கள் 12 பேர் சிறையிலிருந்து தப்பி ஓடியுள்ளனர்.

மத்திய சிறைச்சாலையிலிருந்து இவர்கள் தப்பி ஓடியதாக அறிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து அப்பகுதியெங்கும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது. (எ)

காம்பூஷியா

## லிதுவேனிய பிரச்சினைத் தீர்வுக்கு கட்டுப்பாடு அவசியம்

### மாகிரட் தாட்சர் ஆலோசனை

லண்டன் மார்ச் 29

லிதுவேனிய சர்ச்சையைத் தீர்ப்பதில் ரஷ்யாவும், லிதுவேனியாவும கட்டுப்பாட்டுடன் நடந்து கொள்ள வேண்டும.

இவ்வாறு பிரிட்டிஷ் பிரதமர் மாகிரட் தாட்சர், ரஷ்யத் தலைவர் மிக்காயல் கொர்பச்சேவுக்கு ஆலோசனை வழங்கினார்.

ரஷ்யத் தலைவரை தொலைபேசியில் தொடர்பு கொண்ட தாட்சர் இது பற்றிய தமது கருத்தை வெளியிட்டார்.

சுமார் 50 நிமிட நேரம் அவர் தொலைபேசியில் உரையாடினார்.

லிதுவேனிய சுதந்திரப் பிரகடனத்தை தாம எதிர்ப்பதாகவும அவரது நிலைமை குறித்தும மிக்காயல் கொர்பச்சேவ் தாட்சரிடம் விளக்கினார்.

ரஷ்ய தலைவருடன் தொலைபேசியில் உரையாடிய தாட்சர் பின்னர் பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் லிதுவேனிய நெருக்கடி பற்றி உரைநிகழ்த்தினார்.

பால்டிக் குடியரசின் பிரச்சினை சுமுக பேச்சுவார்த்தைகள் மூலம தீர்க்கப்பட வேண்டும என அவர் தெரிவித்தார் இந்த விடயத்தில் வன்முறை பயன்படுத்தப்பட்டது பலனற்ற ஒன்றெனவும அவர் தெரிவித்தார். (எ)

— விளம்பரம் —

## ஒரு இலட்ச ரூபாய் சன்மானம்

### திருக்குர்ஆன் தீர்ப்பு 1ம் 2ம் பாகங்கள் வெளிவந்து விட்டன

குர்ஆன், ஹதீஸ், இஜ்மாஉ, கியாஸ், பகுத்தறிவு முதலாம மூலப் பிரமாணங்களை அடிப்படையாய்க் கொண்ட இஸ்லாத்தின் கொள்கை (தௌஹீது) காலா காலம தோன்றிய தோன்றுகிற பித்அத்வாதிகளான விஷமிகளால் புரட்டப்பட்டும திரிபுபடுத்தப்பட்டும கொண்டே இருக்கிறதென்பதை இறை வழிகாட்டலால் நான் கண்டறிந்தேன்.

இவ்விஷயத்தை அறிவுள்ள மக்களின் கவனத்துக்கு எத்தி வைப்பதற்காக, திருக்குர்ஆன் தீர்ப்பு என்ற பெயருடன் ஓர் நூலைப் பல பாகங்களாய் எழுதிஅவற்றில் 1 ம, 2 ம பாகங்களை மட்டும தற்போது வெளியிட்டுள்ளேன்.

அவற்றில் இடமபெறும முக்கிய விஷயங்களில் சிலவற்றை மட்டும இங்கே தருகிறேன்.

1 வது— அல்லாஹ்வுடன் அவனல்லாத எதுவும (இல்லாமை - சூன்யம என்பதுவு கூட) இணையாய், துணையாய், ஒப்பாய், நிகராய், சமமாய், கூட்டாய் இல்லவே இல்லையென்றும இதுவே இஸ்லாத்தின் உண்மையான கொள்கையென்றும எவரும மறுக்க முடியாத உறுதியான ஆதாரங்களுடன் விளக்கியுள்ளேன்.

இதற்கு மாறாக அல்லாஹ்வுடன் அவனல்லாதவையும உண்டென்று உலக மக்களில் எவராவது ஆதாரங்களுடன் எழுத்து மூலம நிரூபித்துக் காட்டினால் ஓர் இலட்ச ரூபாய் சன்மானம தருவதாக வாக்களித்துள்ளேன்.

திருக்குர்ஆன் தீர்ப்பு 2 ம பாகம 219 ம பக்கத்தில், திருக்குர்ஆனின் பகிரங்க சவால் என்ற தலைப்பில் இதைக் காணலாம். இதற்குரிய நிபந்தனைகளும தரப்பட்டுள்ளன.

2 வது— இஸ்லாம தரும கொள்கை எது? ஷிர்க் (இணை ஏற்படுத்தல்) என்றால் என்ன? இதன் இனங்கள் எவை? தௌஹீது என்றால் என்ன?

அது எத்தனை வகை? இஸ்லாம விளக்கும தௌஹீது எது? சுன்னத் வல் ஜமாஅத்தார் என்பவர்கள் யார்? இவர்களை இனம காண்பது எப்படி? என்பவை போன்ற பல அரிய விஷயங்கள் ஆதாரங்களுடன் விளக்கப்பட்டுள்ளன.

3 வது— தௌஹீது, ஏகத்துவம, அத்வைதம, துவிதம, விசிட்டாத் வைதம, திரித்துவம, ஏக இறைக் கொள்கை, ஓரிறைக் கொள்கை, ஒருமை வாதம, இருமை (பன்மை) வாதம, பொருள் முதல் வாதம, கருத்து முதல் வாதம, சர்ப்புக் கொள்கை, பரிணாமக் கொள்கை போன்ற பல கொள்கைகளில் இஸ்லாத்துக்குச் சொந்தமான கொள்கை எது? என்பது மிகத் தெளிவாய் விளக்கப்பட்டுள்ளது.

கார்ல்மார்க்ஸ், லெனின் போன்றோரின் கொள்கையும இஸ்லாத்தின் கொள்கையும ஒப்பிட்டு நோக்கிக் காட்டப்பட்டுள்ளது.

4 வது— பிற மத மேதைகளான பிளேட்டோ, ஸான்ஸ் ஹற்ரேன், பிருட்லி, செயின்பெனவென்டுரு, இறீன், ஷில்லர், ஸோக்றட்டீஸ், கான்ற், ஹெகல், அரிஸ்டோட்டில், தௌடபாதர், சங்கர், இராமானுஜர், தாயுமானவர் போன்றவர்களின் கொள்கை விளக்கங்களுக்கும இஸ்லாத்தின் கொள்கைக்குமுள்ள ஒற்றுமை, வேற்றுமைகள் எவை? என்பவை போன்ற பல விஷயங்கள் தெளிவாய் விளக்கப்பட்டுள்ளன.

5 வது— உலக மதங்கள் யாவும இறைவன் உண்டென்றும அவன் ஒருவனேயென்றும பூரணமாய் ஏற்றுக் கொண்டிருக்கும போது அதே கருத்தையே இஸ்லாமும வற்புறுத்துவதானால் பிற மதங்களுக்கும இஸ்லாத்துக்குமுள்ள வேறுபாடு என்ன?

இக் கொள்கையை வலியுறுத்த 1,24,000 நபிமாரும அற்புதங்களும யுத்தங்களும அவசியமா?

இஸ்லாம இறுதி மதம என்பது உண்மையா? இஸ்லாத்தையே நான் மார்க்கமாய் ஏற்றுக் கொண்டேன் என்று இறைவன் கூறுவதன் உண்மை என்ன? என்பவை போன்ற கேள்விகளுக்கெல்லாம சரியான ஆதாரங்களுடன் விளக்கம தரப்பட்டுள்ளது.

6 வது— தொழுகை, நோன்பு முதலாம கடமைகளைக் கொண்டு இம்மை மறுமைப் பயன்களைப் பெறுவது எப்படி? என்ற விபரம தெளிவாய் விளக்கப்பட்டுள்ளது.

7 வது— அக்கரைப்பற்றில் வெளியான "வஹ்தத்துல் உஜூத் உண்மை விளக்கம", மருதமுனையில் வெளியான "ஜமாலின் (கலிமாவின்) உண்மை எல்லாம இறைவன் என்பதல்ல.

கல்முனையில் வெளியான "தௌஹீதுக்கு எதிர்மறை வஹ்தத்துல்வுஜூத்" ஆகிய மூன்று நூற்களுக்கும மறுப்புத் தெரிவித்து ஆதாரங்களுடன் விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

இந்த நூலாசிரியர்கள் எக் கூட்டத்தினர் என்பதை விளக்குவதற்காக "ஹுஸாமுல் ஹறமைன்" என்ற பத்வாவில் ஓர் பகுதி விளக்கம தரப்பட்டுள்ளது.

8 வது— உலகின் தத்துவமேதைகள் யாவரும எல்லா மதங்களும விஞ்ஞானமும ஏகமனதாய் ஏற்றுக் கொண்டுள்ள சுமார் 20 தத்துவ விளக்க உண்மைகள் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன.

மாக இந்தியாவுக்குள் புகுமுயன்ற

## திரேசா அம்மையாரை அரபாத் சந்தித்தார்

கல்கத்தா இந்தியா மார்ச் 29

பலஸ்தீன்ய விடுதலை இயக்கத் தலைவர் யஸிர் அரபாத் நோபல் பரிசு பெற்ற திரேசா அம்மையாரை கடந்த புதன்று சந்தித்தார்- போரிடும நாடுகளிடையே அன்பின் மூலம அமைதியை ஏற்படுத்தலாம என அரபாத் திரேசா அம்மையாரிடம கூறினார்-

கல்கத்தாவுக்கு ஒரு நாள் விஜயத்தை மேற்கொண்ட அரபாத் 79 வயதான திரேசா அம்மையாரைச் சந்தித்தார்- அப்போதே மேற்கண்ட செய்தியைச் சொன்னார்- (எ—ரி)

காம்பூஷியா

## நெருக்கடி தீர்வுக்கு வியட்னாம் சீனாவின் உதவியை நாடும்

பீக்கிங் மார்ச் 29

காமபூஷிய நெருக்கடி தீர்வுக்கு வியட்னாமின் உதவியை சீனா நாடலாமென தெரிகிறது-

வியட்னாமுடன பேச்சுவார்த்தை நடத்த நாம விரும்புவதாக புதன்கிழமை சீனா தெரிவித்திருக்கிறது-

காமபூஷ்ய நெருக்கடி தீர்வுக்காக கடந்த ஆண்டு சீனாவுடன் வியட்னாமும இரு சுற்றுப் பேச்சுக்களை நடத்தின-

சீனா கெமரூச் கெரில்லாக்களுக்கு ஆயுதங்களை வழங்கி வருகிறது- நோம பெனனில் வியட்னாம ஆதரவு அரசாங்கத்துக்கெதிராக 3 குழுக்கள போராட்டம நடத்தி வருகின்றன-

இந்த மூன்று குழுக்களில் கெமரூச் கெரில்லாக்கள் அதி சக்திவாய்ந்த குழுவாக விளங்குகின்றனர்-

சுமார் 10 லட்சம மக்களின் உயிரிழப்புக்கு காரணமாக இருந்த இவர்கள் 1979 ஆம ஆண்டு வியட்னாம துருப்புகளின் ஊடுருவலால் ஆட்சி கவிழ்க்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது- (எ)

## சீன, ரஷ்ய எல்லைகளின் படை பலம் குறைக்கப்படலாம்

### பிரதமர் லீ. பெங் அடுத்த மாதம் ரஷ்யா செல்கிறார்

பீக்கிங் மார்ச் 29

சீனாவும, ரஷ்யாவும சர்ச்சைக்குரிய எல்லைகளில் படை பலத்தைக் குறைக்க விரைவில் இணங்கலாம எனத தெரியவருகிறது-

அடுத்த மாதம சீனப் பிரதமர் லீ பெங ரஷ்ய விஜயமொன்றை மேற்கொள்கிறார்- இந்த விஜயம சீன, ரஷ்ய எல்லைகளின் படைக் குறைப்புக்கு ஏதுவாகலாமெனக் கூறப்படுகிறது-

சீன வெளிநாட்டமைச்சர் குயான் கியுசென் இது பற்றிப் புதனன்று தெரிவித்தார்-

சீன வெளிநாட்டமைச்சர் பத்திரிகையாளர் மாநாடொன்றில் பேசினார்-

அவ்வேளையில் அவர் தொடர்ந்து கூறியதாவது-

ரஷ்ய, சீன நல்லுறவை வளர்த்துக் கொள்ள உகந்த தருணம உருவாகியிருக்கிறது- இரு நாடுகளுக்கிடையேயும பொருளாதாரக் கூட்டுறவை வளர்த்துக் கொள்ளவும நாம எண்ணியிருக்கிறோம-

எல்லைப்புற துருப்புகளை குறைப்பது குறித்து சீன - ரஷ்ய ஒப்பந்தம ஒன்று கைச்சாத்திடப்பட வேண்டும என்பதே எமது அவா-

இவ்வாறு அவர் கூறினார்-

சீனா அதன் எல்லையில் சுமார் 10 லட்சம துருப்புகளை நிலைகொள்ளச் செய்திருக்கிறது- ரஷ்ய எல்லையில் சுமார் 750-000 துருப்புகள் உள்ளன- (எ)

சுமார் 20 தத்துவ விளக்க உண்மைகள் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன.

இன்னும பல அரிய ஞான விளக்கங்கள் பல விபரம தரப்பட்டுள்ளன-

ஒவ்வோர் மனிதனும இவ்விரு நூற்களையும வாசித்தறிய வேண்டியது அவசியமாகும.

இவ்விரு நூற்களையும இலங்கையின் நாலா பாகங்களிலும பெற்றுக் கொள்ளலாம-

கொழும்பில் எம டி குணசேன அன் கொமபனி லிமிடட்டிலும பெறலாம-

தபாலில் பெற்றுக் கொள்ள விரும்புவோர் வி பி :பி மூலம பெற்றுக் கொள்ளலாம-

1 ம பாகம 65/-
2 ம பாகம 75/-

**விசேட குறிப்பு**

அன்புடையீர்!

லாஇலாஹ இல்லல்லாஹு என்ற தௌஹீதக் கலிமாவுக்கு வணக்கத்துக்குரிய நாயன் யாருமில்லை- அல்லாஹ்வைத் தவிர என்பதே பொருள் என்றும இதுவே இஸ்லாத்தின் கொள்கையென்றும சிலர் கூறிக் கொண்டும எழுதிக் கொண்டும இருக்கிறார்கள்-

கலிமத்துத்தையிபாவுக்கு இப்படிப் பொருள் கூறுவது சுத்தமான பிழையென்றும இது இஸ்லாத்தின் தௌஹீதுக்கு நேர் விரோதமான துவித சித்தாந்தமென்றும இப்படிப் பொருள் கொள்வது ஷிர்க்கை மேலும மேலும உறுதிப்படுத்துமேயல்லாமல் தௌஹீதை நிலைப்படுத்தாதென்றும எமது திருக்குர்ஆன் தீர்ப்பு 1 ம, 2 ம பாகங்களில் குர்ஆன், ஹதீஸ் முதலாம உறுதியான ஆதாரங்களுடன் நிரூபித்துக் காட்டியுள்ளேன்-

நான் காட்டிய உறுதியான ஆதாரங்களுக்கு மாறாக தங்களுடைய துவிதக் கொள்கையே சரியானதென்று யாரும கண்டால் அகில உலக மக்களும தெளிவாய் அறியக் கூடியதாய்ச் சரியான ஆதாரங்களுடன் எழுத்து மூலம நிரூபித்துக் காட்டி என்னிடமிருந்து ஓர் இலட்ச ரூபாய் சன்மானத்தைப் பெற்றுக் கொள்ளுமபடி அவர்களை அன்போடு கேட்கிறேன்-

மேலும உலமாக்கள், இஸ்லாத்தின் பாதுகாவலர்கள், இறந்து கொண்டிருக்கும இஸ்லாத்துக்கு உயிரூட்டுபவர்கள் என்பது உண்மையானல் இவ் விஷயத்தை இருட்டடிப்புச் செய்து மூடி மறைக்காமல் மௌனிகளாய் மாறாமல், நான் எழுதாத விஷயங்களை (எமது நூற்களில் இல்லாத விஷயத்தை) இருப்பதாய்க் காட்டி அல்லது திரிபுபடுத்தாமல் தான்தோன்றித்தனமான சட்டங்களை அமுலாக்கி மக்களைக் குழப்பாமல் ஆதாரங்களோடு உள்ள உண்மையை உலகறியச் செய்வது தங்களுடைய கட்டாயக் கடமை (பர்லு) என்பதை நான் உங்களுக்கு கூறி வைக்கிறேன்-

குர்ஆன் 27.64

அல்லாஹ்வுடன் வேறு இலாஹு இருக்கிறதா?) (இல்லை) நீங்கள் (உண்டென்று) உண்மை சொல்பவர்களாய் இருந்தால் உங்களுடைய ஆதாரங்களைக் கொண்டு வாருங்கள்-

இப்படிக்கு
(ஒப்பம)
எம எஸ் எம அப்துல்லாஹ் (பயில்வான்)

விலாசம
414 ஹாஜியார் ரோட்
மருதமுனை-3

### திருத்தம

கடந்த 24-3-90 ல் தினபதியில் வெளியான "தௌஹீத்"? "ஷிர்க்"? "குப்ரியத்"? என்ற கட்டுரையில் பக்க இலக்கம 4 ல், 5 வது கலத்தில் 3 வது பந்தியை — இந்த ஸுஜூதில் ஈடுபடாத (மறுத்த) இப்லீஸைத்தான் அல்லாஹ் லஃனத்துச் செய்திருக்கிறானே தவிர, முஷ்ரிக் என்று பட்டம சூட்டவில்லை- இவ் விபரத்தை எமக்கறிவிக்கிற அதே குர்ஆன் யூசுபு (அலை) அவர்களை ஒரு சிலர் ஸுஜூது செய்தார்கள் என்று அறிவிக்கிறது — எனவும 5 ம பக்கத்தில் 1 வது கலத்தில் வரும 3 வது பந்தியில் — இறைவனைவிடத் தாழ் பதவியிலுள்ளவைதான் சிருட்டி என்பதை - இவனை விடத் தாழ் பதவியிலுள்ளவைதான் சிருட்டியென்பது — எனவும வாசகர்கள் திருத்தி வாசிப்பார்களாக-

# ரமழான் நோன்பின் பயனை முழுமையாகப் பெறுவோம்

— பாஹிர் எஸ். டீ. கலீல் —

இஸ்லாத்தின் ஐமபெரும கடமைகளில் நோன்பு நான்காம கடமையாகும–

அல்லாஹ் தன் திருமறையில் "ஈமான் கொண்ட விசுவாசிகளே! உஙகளுக்கு முன் இருந்தவர்கள் மீது விதிக்கப்பட்டது போல் உஙகள் மீதும நோன்பு நோற்பது கடமையாக்கப்பட்டு இருக்கின்றது–

(அதனால்) நீஙகள் பரிசுத்தமானவர்களாகலாம– (2–183) என்று கூறுகிறான்–

இத்திருவசனம மூலம நோன்பின் அவசியத்தை அவன் உணர்த்துகிறான்–

புனித ரமழான் மாதம முஸ்லிமகளுக்காக வழஙகப்பட்ட மிகப்பெரிய வெகுமதியாகும்–

ஒரு ஹதீஸில் இவ்வாற அறிவிக்கப்பட்டு உள்ளது–

ரமழான் மாதம எப்படிப்பட்ட சிறப்புள்ளது என்ற மனிதர்கள் விளஙகி விடுவார்களானால் ஆண்டு முழுவதும ரமழானாகவே இருக்க வேண்டுமென என் உமமத்தினர் விருமபுவார்கள்–

ஆண்டு முழுவதும நோன்பு நோற்பது சிரமமான காரியம என்ற மக்கள் விளஙகுகின்றனர்–

ஆனால் புனித ரமழான் மாதத்தில் கிடைக்கும நன்மைகளைக் கருதி மனிதர்கள் அதனை விருமபுவார்கள் என்ற ரஸூல் (ஸல்) அவர்கள் அருளுகிறார்கள்–

அல்லாஹ் கூறியதாக நபி (ஸல்) அவர்கள் இவ்வாற கூறினார்கள்–

மனிதருடைய எல்லா அமலும அவனுக்குரியது– நோன்பைத் தவிர –

அது எனக்குரியது நானே நற்கூலி கொடுப்பேன் என்ற அல்லாஹ் கூறுகிறான்–

உண்மையில் நோன்பாகிறது ஏனைய அமல்களைப் போன்ற கண்ணால் காண முடியாது–

உதாரணமாக ஒரு மனிதன் தொழுதால் அதனைக் காண முடியும– நோன்பு இரகசியமானது அல்லாஹ்வைத் தவிர யாரும அதைக் காண முடியாது–

தொழுகைக்கும, குறிப்பாக நோன்புக்கும எவ்வித பொருளாதார வசதியோ பிரயாண வசதியோ தேவைப்படாது–

மாறாக முஸ்லிமான வயது வந்த ஆண் பெண் – வாலிபர், ஏழை – பணக்காரன் யாராயினும

அதற்கு அவனே கூலி தருவான்

ரமழானின் சிறப்பைப் பற்றி குறிப்பிடும போது யார் ரமழான் மாதம முன்னோக்கியதை இட்டு சந்தோஷம அடைகிறாரோ அவருடைய உடமபின் மீது நரக நெருப்பு தீண்டுவதை அல்லாஹ் ஹராமாக்கி விடுகிறான் என்ற அண்ணலார் திருவுளமானார்கள்–

இந்த ஹதீஸில் ரமழான் மாதம முன்னோக்கியதை இட்டு சந்தோஷப்பட்டாலே இவ்வளவு பாதுகாப்பு என்றால் நோன்பு நோற்றால் எவ்வளவு சிறப்பு உண்டு? என்பதை நாம சிந்தித்துப் பார்க்க வேண்டும–

அல்லாஹுத்தஆலா ஹஸரத் மூஸா (அலை) அவர்களுக்கு "முஹமமது (ஸல்) அவர்களுடைய உம்மத்தினருக்கு இரண்டு ஒளியை (நூர்) கொடுத்து உள்ளேன்–

அது இரண்டு இருள் நிறைந்ததிலே அவர்களுக்கு தஙகடமளிக்கமாட்டாது!

அப்போது! மூஸா (அலை) அவர்கள் அல்லாஹ் இடத்தில்–

யாஅல்லாஹ்! இந்த இரண்டு ஒளியும என்ன? என்று கேட்டார்கள்– (1) நோன்பின் ஒளி– (2) குர்ஆனின் ஒளி–

பின்னர் இரண்டு இருளும என்ன? என்ற ஹஸரத் மூஸா (அலை) அவர்கள் அல்லாஹ்விடம கேட்டார்கள்!

அதற்கு அல்லாஹ் (1) கப்ரு (2) கியாமநாள் என்று ஹஸரத் மூஸா (அலை) அவர்களிடம கூறினான்–

அல்லாஹுத்தஆலா இருள் நிறைந்த இரண்டைக் குறிப்பிட்டு உள்ளான்–

அதில் ஒன்ற கப்ராகும–

அனைவரும மரணித்தே திருவோம என்பதில் அணு அளவும சந்தேகமில்லை–

கப்ராகிறது இருள் சூழ்ந்த இடமாகும– அதிலே ஒளியாக திகழ்வதில் நோன்பு முதலிடம வகிக்கிறது–

ஆகவே இப்பரிசுத்த ரமழான் மாதத்தின் மகிமையை உணர்ந்து ஒளி இல்லா இடத்திற்கு ஒளியான நோன்பை நோற்ற எமது கப்ரை வெளிச்சமுள்ளதாக ஆக்கிக் கொள்ள வேண்டும–

நோன்பின் பலன் எவ்வளவோ இருக்கின்றன–

அவைகளில் ஒன்ற "ஒரு அனாதையின் உணர்வை அனாதையாலேயே உணர முடியும–

அதே போன்ற ஏழையுடைய உணர்வை ஏழையாலேயே கணிக்க முடியும–

ஆனால் புனித ரமழான் மூலம ஒவ்வொரு செல்வந்தனும பசியினுடைய கொடூரத் தன்மையை உணர்ந்து கொள்கிறான்–

அத்தோடு வாரி வழஙகும தன்மையையும அந்நோன்பு உண்டாக்குகிறது–

புனித ரமழான் மாதத்தில் நோன்பு நோற்ற குர்ஆன் ஓதுவதிலும திக்ரு செய்வதிலும நபிலான வணக்கஙகளை அதிகமாகச் செய்வதிலேயே ஒவ்வொருவரும தமமை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும–

மாறாக கோள் சொல்வதிலும – பொய் புறம் பேசுவதிலும வீண் விளையாட்டுக்களிலும சினிமா – வானொலி கேட்பதிலும நாம ஈடுபட்டோமேயானால் நோன்பின் பலனை இழப்பதுடன் தண்டனைக்கும ஆளாவோம–

எனவே ரமழான் மாதத்தைச் சஙகைப்படுத்தி நல்ல அமல் செய்து நோன்பின் பிரதி பலனை அடைவதற்கு எல்லாம வல்ல அல்லாஹ் நமக்கு நல்அருள் பாலிப்பானாக! ஆமீன்!!

## தினபதி இஸ்லாமிய பூங்கா

தயாரிப்பு: எப். எம். பைரூஸ்

# தராவீஹ் தொழுகையால் கிடைக்கும் நன்மைகள்

— என். எம். ஏ. ஜெலீல் —

நாம புனித ரமழானில் தராவீஹ் தொழுகையைத் தொழுகிறோம.

ஒரு சமயம பெருமானார் (ஸல்) அவர்களிடம தராவீஹ் தொழுகையின் சிறப்பைப் பற்றிக் கேட்கப்பட்டது. அவர்கள் பின்வருமாற கூறினார்கள்.

ரமழானின் முதலாவது இரவில் தராவீஹ் தொழுவதால் சிற பாவஙகள் மன்னிக்கப்படுகின்றன.

இரண்டாவது இரவில் தராவீஹ் தொழுவதால் பெற்றோர்களின் பாவம மன்னிக்கப்படுகின்றன–

மூன்றாவது இரவில் தராவீஹ்

நான்கு வேதஙகளை ஓதி உணர்ந்த பயன் கிடைக்கிறது.

ஐந்தாவது இரவில் தராவீஹ் தொழுவதால் கஃபத்துல்லா மஸ்ஜிதுன் நபவி, மஸ்ஜிதுல் அக்ஸா ஆகிய மூன்ற இல்லஙகளில் தொழுத நன்மை கிடைக்கின்றன.

ஆறாவது இரவில் தராவீஹ் தொழுவதால் ஏழாவது வானத்தில் இருக்கும பைத்துல் மஃமூர் என்னும புண்ணிய ஆலயத்தை

வின் அர்ஷைச் சுமந்து கொண்டிருக்கும மலக்குகள் அவனுக்குப் பிழை பொறுக்கத் தேடுகிறார்கள்.

பதினாறாவது இரவில் தராவீஹ் தொழுவதால், நரக விடுதலையும, சுவர்க்கத்தின் சோபனமும கூறப்படும.

பதினேழாவது இரவில் தராவீஹ் தொழுவதால், நபிமார்களுக்குக் கூடிய நன்மையின் அளவு எழுதப்படும.

ஸிராத்துல் முஸ்தகீம பாலத்தைக் கடந்து செல்வார்.

இருபத்து எட்டாவது இரவில் தராவீஹ் தொழுவதால், பற்பல அந்தஸ்துக்கள் உயர்த்தப்படுகின்றன.

இருபத்து ஒன்பதாவது இரவில் தராவீஹ் தொழுவதால். ஹஜ் உம்றா செய்த நன்மை கிடைக்கிறது–

முப்பதாவது இரவில் தராவீஹ் தொழுவதால் அல்லாஹ், "ஏ அடியானே! சொர்க்கத்தின் கனிகளைப் புசித்து அஙகு வற்றாத ஜீவ நதியாக ஓடிக் கொண்டிருக்கும ஸல்ஸபீல் என்னும மதுர ஆற்ற நீரில் குளித்து, (ஹவ்ளுல்கவ்தர்) என்ற சுவை குன்றாத தடாகத்தின் நீரைப் பருகி இன்புற்றிருப்பாயாக.

உண்மையான முஸ்லிம விசுவாசிகளே!

அல்லாஹ்வைப் பயந்து அவ

நான் உன் இரட்சகன். நீ என் அடியான்" என்று கூறுகிறான்.

அல்லாஹ் மானிட வர்க்கத்திற்கு அளித்திருக்கும ஒவ்வொரு பாக்கியமும ஒப்பற்றவைகளாகவும, விலைமதிக்க முடியாதவைகளாகவும இருக்கிறன.

எவராகிலும அவைகளைப் பெற்றுக் கொள்ள நாடியவர்கள் ஐஙகாலத் தொழுகையை இமாம ஜமாஅத்துடன் தொழுது தராவீஹ் தொழுகையையும நோன்பையும நிறைவேற்றி நற்பாக்கியஙகளை அடைவார்களாக!

தவ்பா செய்து திருந்தும தன்மையைத் தந்து நேரான வழியில் நடக்க நல்ல ஹிதாயத்தை அல்லாஹ் எமக்கு தந்தருள் புரிவானாக!

ஆமீன்!! யாரப்பல் ஆலமீன்!!!

# ரமழானின் சிறப்பு பற்றிய நபி மொழிகள்

எவர் ஒருவர் ரமழான் மாதம வருவதைக் கொண்டு மகிழ்ச்சி அடைகிறாரோ அவருடைய உடமபை நரகத்தை விட்டும அல்லாஹுத்தஆலா ஹராமாக்கி விடுகிறான்–

அதாவது அவருடைய உடமபை நரகம தின்பது ஹராம–

ரமழான் மாதத்தில் உள்ள நன்மைகளை என்னுடைய உமமத்தினர் அறிந்தார்களேயானால் வருடம முழுவதும நோன்பாக இருக்கக் கூடாதா என்ற ஆதரவு வைப்பார்கள்–

நிச்சயமாக சுவர்க்கத்திலே எட்டு வாயில்கள் உள்ளன–

அதில் ஒரு வாயிலுக்கு பெயர் றையான்–

இந்த வாயிலில் நோன்பாளிகளைத் தவிர வேற யாரும நுழைய முடியாது–

நான்கு நபர்களுக்குச் சுவர்க்கம திறக்கப்படுகிறது–

குர்ஆனைத் தினமும ஓதக் கூடியவர்–

நாவைப் பாதுகாக்கக் கூடியவர்–

பசித்தவர்களின் பசியைத் தீர்க்கக் கூடியவர்–

நோன்பு நோற்கக் கூடியவர்–

மூஸா (அலை) அவர்களுக்கு அல்லாஹ் நபிகள் நாயகம (ஸல்) அவர்களுடைய உமமத்துக்கு இரண்டு ஒளியையும இரண்டு இருளையும கொடுத்திருக்கிறேன் என்று கூறினான்–

அப்போது ஹஸரத் மூஸா (அலை) அவர்கள் யாஅல்லாஹ் அந்த இரண்டு ஒளியும இருளும் என்ன என்ற கேட்டார்கள்–

அப்போது அல்லாஹ் இரண்டு ஒளியாகிறது குர்ஆனும நோன்புமாகும–

இரண்டு இருள் என்பது கப்றும கியாமத்து நாளும என்று கூறினார்கள்–

ஆதமுடைய மக்களுடைய சகல அமல்களும் அவனுக்காக இருக்கும நோன்பைத் தவிர, ஏன் என்றால் அது என்னுடையது அதற்கு நானே கூலி கொடுக்கிறேன் என்ற அல்லாஹ் கூறுகின்றான்–

எவர் ஒருவர் ரமழான் மாதத்தில் நமபிக்கையுடனும தூய்மையான நல்லெண்ணத்துடனும நோன்பு நோற்கிறாரோ அவருடைய முந்திய சகல பாவஙகளும மன்னிக்கப்படும–

[தர்கதுன் நாஸிகீன்]

ஏ எஸ் மனாப்

வந்த ஆண் பெண் - வாலிபர், ஏழை - பணக்காரன் யாராயினும சரி அனைவர் மீதும நோன்பு கடமையாகும-

ஒரு வருடத்தில் பதினொரு மாதம் உண்டு- பருகிக் கழித்த நாம ஒரு மாதத்தை அல்லாஹ் வுக்காக நோன்பு நோற்கக் கூடாதா?

அல்லாஹ் மனிதனைப் படைத்த நோக்கமே அவனை வழிபடுவதற்கே-

ஆரமபத்தில் கூறியவாறு "நோன்பு அல்லாஹ்வுக்குரியது-

றோர்களின் பாவம் மன்னிக்கப் படுகின்றன-

மூன்றாவது இரவில் தராவீஹ் தொழுவதால் ஏ அடியானே! உனது தொழுகையை முகஸ்துதியை விட்டுப் பரிசுத்தப் படுத்திக் கொள்வாயானால் நீ முன் செய்த பாவஙகளை எல்லாம அல்லாஹ் மன்னித்து விடுவான் என்ற ஒரு மலக்கு அழைத்து கூறுகிறார்!

நான்காவது இரவில் தராவீஹ் தொழுவதால் தவ்ராத், இன்ஜீல், ஸபூர், குர்ஆன் ஷரீப் ஆகிய

## குர்ஆனின் குரல்

நீஙகள் அல்லாஹ்வின் பெயரால் செய்யும உடன்படிக்கையைப் பரிபூரணமாக நிறைவேற்றுஙகள்-

அல்லாஹ்வைச் சாட்சியாக வைத்துச் சத்தியம செய்த அதனை உறுதிப்படுத்திய பின்னர் அந்தச் சத்தியத்தை நீஙகள் முறித்து விடாதீர்கள்-

நிச்சயமாக அல்லாஹ் உஙகளுடைய செயலை நன்கு அறிவான்-

(16-91)

# மஜ்லிஸ்

ஹிஜ்ரி 1410 றமழான் பிறை 2

## புனிதர்களாக மாறுவோம்

மீண்டும ஒரு முறை புனித ரமழான் நோன்பை அடைந்து விட்டோம.

பாவிகளான நமமில் ரமழான் மாதம பாவக் கறைகளைச் சுட்டெரிக்க வந்த அருள் நிறை மாதமாகும.

ரமழானின் சிறப்பை எனது "உமமத்து"மார்கள் அறிவார்களானால், முழு வருடமும ரமழானாக இருக்க வேண்டுமென்றே விருமபுவார்கள்-

இவ்வாறு நபி (ஸல்) அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

ரமழானின் சிறப்பை அறிய இது ஒன்றே போதுமான சாதனையாகும.

எனவே —

அல்லாஹ்வின் அருள் நிறைந்த இந்த ரமழான் மாதத்தில் நாம நல்ல அமல்களைச் செய்து புனிதர்களாக மாற உறுதி பூணுவோமாக!

தில் இருக்கும பைத்துல் மஃமூர் என்னும புண்ணிய ஆலயத்தை தவாப் செய்த நன்மை கிடைக்கிறது-

ஏழாவது இரவில் தராவீஹ் தொழுவதால், நானே இறைவன் என்று கூறி மக்களை வழிகெடுத்துக் கொண்டிருந்த பிர் அவ்னையும அவன் ஆதரவாளர்களையும எதிர்த்துப் போர் புரிந்த நன்மை கிடைக்கிறது.

எட்டாவது இரவில் தராவீஹ் தொழுவதால், ஹஜ்ரத் இப்ராஹீம (அலை) அவர்களுக்கு அல்லாஹ் எத்தகைய உதவி செய்தானோ அத்தகைய உதவி கிடைக்கிறது.

ஒன்பதாவது இரவின் தராவீஹ் தொழுவதால், நபி பெருமானார் (ஸல்) அவர்கள் வணக்கம புரிந்ததைப் போன்று வணக்கும புரிந்தவனாகிறான்-

பத்தாவது இரவில் தராவீஹ் தொழுவதால், இரு உலக வாழ்க்கைக்கும சிறந்தது எதுவோ அதை அவனுக்கு அல்லாஹ் கொடுக்கிறான்.

பதினோராவது இரவில் தராவீஹ் தொழுவதால் உலகத்தை விட்டுப் பிரியும போது, அன்று பிறந்த பாலகனைப் போன்று பிரிகிறான்.

பன்னிரெண்டாவது இரவில் தராவீஹ் தொழுவதால் பூரண சந்திரனைப் போன்ற முகம பிரகாசித்தவனாக மறுமை நாளில் எழுப்பப்படுவான்-

பதின்மூன்றாவது இரவில் தராவீஹ் தொழுவதால், எவ்விதக் கவலையுமின்றி மறுமையில் எழுப்பப்படுவான்.

பதின்நான்காவது இரவில் தராவீஹ் தொழுவதால். அல்லாஹ் விடம மலக்குகள் இன்னார் தராவீஹ் தொழுகை தொழுதான் என்ற சாட்சி கூறுகிறார்கள்.

பதினைந்தாம இரவில் தராவீஹ் தொழுவதால், அல்லாஹ் களுக்குக் கூடிய நன்மையின் அளவு எழுதப்படும.

பதினெட்டாம இரவில் தராவீஹ் தொழுவதால் அவரையும ,அவரின் பெற்றோரையும அல்லாஹ் பொருந்திக் கொள்கிறான்.

பத்தொன்பதாவது இரவில் தராவீஹ் தொழுவதால், பிர் தவ்ஸ் என்னும உயர்ந்த சுவர்க்க வாதிகளின் அந்தஸ்துக்கு அல்லாஹ் அவரை உயர்த்துகிறான்.

இருபதாவது இரவில் தராவீஹ் தொழுவதால் (ஷுஹதாக்களின்) வீரத் தியாகிகளின் பலன் கிடைக்கிறது.

இருபத்து ஒன்றாவது இரவில் தராவீஹ் தொழுவதால், பிரகாசம பொருந்திய ஒரு மாளிகை அவருக்குச் சுவர்க்கத்தில் தயாரிக்கப்படுகிறது.

இருபத்து இரண்டாவது இரவில் தராவீஹ் தொழுவதால், எவ்விதக் கவலையும அச்சமும அற்றவராக மறுமையில் அல்லாஹ்வைச் சந்திப்பான்.

இருபத்து மூன்றாவது இரவில் தராவீஹ் தொழுவதால் சொர்க்கத்தில் அவருக்கு விதவிதமான ஆகாரஙகள் தயாரிக்கப்படுகின்றன.

இருபத்து நான்காவது இரவில் தராவீஹ் தொழுவதால், அவர் எதைப் பற்றிக் கேட்கும துஆவும ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

இருபத்து ஐந்தாவது இரவில் தராவீஹ் தொழுவதால் கப்ரின் வேதனையை அல்லாஹ் அகற்றுகிறான்.

இருபத்து ஆறாவது இரவில் தராவீஹ் தொழுவதால், நாற்பது ஆண்டுகள் வரை அமல் செய்தால் எவ்வளவு நன்மை கிடைக்குமோ. அவ்வளவு நன்மைகளை அதிகமாகப் பெறுகிறான்.

இருபத்து ஏழாவது இரவில் தராவீஹ் தொழுவதால். மின்னல் வெட்டி மறைவது போன்ற




## தக்வா வேண்டும்

உண்மையான முஸ்லிம விசுவாசிகளே!

அல்லாஹ்வைப் பயந்து அவனுக்கு அஞ்சி நடக்குமாறு உஙகளுக்கும அதன் பிறகு எனக்கும் அச்சமூட்டி எச்சரிக்கை செய்கிறேன்-

விசுவாசிகளே! மனிதன் என்று உலகில் பிறந்தானோ அன்றே அவன் மரணிப்பதும உண்மையாகி விட்டது-

இதை உலகில் பிறந்த எந்த மனிதனும நிராகரிக்க மாட்டான்-

ஒரு மனிதன் இறந்ததும அவனின் எந்தச் சொத்தும உடைமைகளும அவனுடன் கூடச் செல்ல மாட்டாது-

ரஸுல் (ஸல்) அவர்கள் இதனையே பின்வருமாறு குறிப்பிட்டார்கள்-

ஒருவன் மரணித்ததன் பின்னால் மூன்று விடயஙகள் அவனுடன் கூடச் செல்லும-

அவன் தேடிய சொத்து சுகஙகள் - அவனின் குடுமபம - அவன் செய்த நல்ல அமல்கள்-

இவற்றுள் அவன் செய்த நல்ல அமல்களைத் தவிர ஏனைய இரண்டு விடயஙகளும் புதைகுழியுடன் திருமபி விடும-

அவனுடன் கூடச் செல்வது அவன் செய்த நல்ல அமல்களான நற்காரியஙகள் மட்டுமே-

மையத்துக்குளை அடக்கியதும உனது இறைவன் யார் உனது இமாம் யார்... என்றெல்லாம "தல்கீன்" ஓதுவது மரணித்த மையத்துக்காக அல்ல-

சூழ உள்ளவர்கள் அவற்றை நினைவு படுத்திக் கொள்ளவே அவ்வாறு ஓதப்படுகிறது-

எமது மரணத்தின் பின் சாந்தி அடைந்த ஆத்மாக்களே அல்லாஹ் இடத்தில் போய்ச் சேர்கின்றன-

எமது ஆத்மாக்கள் இறைவனைத் தரிசிக்க வேண்டுமாயின் - மோட்சம அடைய வேண்டுமாயின் - நாம எமது ஆத்மாக்களைச் சாந்தி அடையச் செய்ய வேண்டும-

எமது ஆத்மாக்களைச் சாந்தி அடையச் செய்ய நாம அல்லாஹ் காட்டிய வழியில் நடக்க வேண்டும-

பயபக்தியுடன் நாம வாழ்ந்தால் இறைவனைத் தரிசிப்பதில் எமக்கு எதுவித சிரமமும் இருக்காது-

அஙகு எமது முகத்தில் கரிபூசப்பட மாட்டாது-

மேலும் "தக்வாவை" உடையவர்களே மேலானவர்கள் எனக் கூறப்படுகிறது-

தக்வாவை உடையவன் யார்? என வினவப்பட்டதற்கு பின்வருமாறு விடை அளிக்கப்பட்டது-

அல்லாஹ்வை நாம பார்க்காத போதும அல்லாஹ் எம்மைப் பார்த்துக் கொண்டே இருக்கிறான் என்ற எண்ணத்துடன் நல்ல அமல் புரிபவர்களே தக்வா உடையவர்கள் எனக் கூறப்படுகிறது-

எனவே இறை அச்சத்துடன் நாம வாழ்ந்து தக்வாவுடைய மேலான மனிதர்களாகத் திகழ முயற்சிக்க வேண்டும-

உலகில் நாம சேகரித்த சொத்தும் நாம கண்ட சுகஙகளும ஒருபோதும எமமை வந்தடையாது-

எமது புதைகுழியில் அவற்றை யாரும கொண்டு வந்து போடப் போவதும இல்லை-

எனவே தக்வா உடையவர்களாக நாம செய்த நல்ல அமல்களே எமமுடன் கூட வரப் போகிறது-

ஆகவே தக்வா உடைய நல்ல மனிதர்களாக வாழ்ந்து மரணிக்க அல்லாஹ் எமக்கு நல்லருள் புரிவானாக-

ஆமீன்! ஆமீன்!! யாரப்பல் ஆலமீன்!!! (431)

தொகுப்பு-
ஜே எம ஹாபீஸ்

பிரசஙகம நிகழ்த்தியவர்- மௌலவி எஸ் எம எல் அப்துல் காதர்

நிகழ்த்திய இடம- அல்-அஸ்னா பள்ளிவாசல் அக்குறணை-

நிகழ்த்திய திகதி- 26—1—1990-

# சார்ஜா செல்லும் வீரர்களுக்கு பயிற்சி

## பாடசாலை மாணவர்கள் மூவர் தெரிவு

## ரொஷான் மஹாநாம இல்லை

கொழும்பு மார்ச் 29 சார்ஜா கிண்ண கிரிக்கெட் சுற்றுலாவில் பங்கு கொள்ளும வீரர்களுக்கான பயிற்சிகள் இப்போது ஆரமபமாகியுள்ளன-

மூன்று பாடசாலை மாணவர்களும சுற்றுலாவில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள்-

கொழுமபு ஆனந்தாக் கல்லூரி மாணவர் மார்வன் அத்தபத்து, டி எஸ் சேனநாயக்கா மாணவர் வருண வராகொட, சென் அந்தனீஸ் கல்லூரி பியல் விஜயதுங்க ஆகிய மூவருமே பாடசாலை வீரர்களாக சார்ஜா செல்ல உள்ளனர்- இவர்களும பயிற்சிகளில் ஈடுபட்டுள்ளனர்-

மொத்தம 33 பேர் குழுவில் அங்கம வகிக்கின்றனர்-

ரொஷான் மஹாநாம (காயமடைந்த வீரர்), காமினி விக்கிரமசிங்க ஆகியோர் சார்ஜா செல்லத் தெரிவாகவில்லை- இவர்கள் இருவரும ஆஸ்திரேலிய சுற்றுலாவில் அங்கம வகித்தனர்-

சார்ஜா செல்லத் தெரிவாகியிருப்போர் விவரம—

அர்ஜுன ரணதுங்க, அசங்க குருசிங்க, மகிந்த ஹலன்கொட, சாலிய அஹன்கம, பிரையன் ராஜதுரை, தம்மிக ரணதுங்க, நிலந்தா ரத்நாயக்கா, ரவி ரத்நாயக்கா, அசோக டி சில்வா, அரவிந்த டி சில்வா, ருமேஷ் ரத்நாயக்கா, ஹஷான் திலக்கரட்ண, ருவன் கல்பகே, கிரஹ்ம லெப்ரோய், குபில விஜயகுணவர்த்தன, அதுல சமரசேகர, ரொஷான் ஜுரம பதி, சனத் ஜயசூரிய, பிரன்டன் குருப்பு, எஸ் டொன் அனுரசிறி, சந்திக அத்துருசிங்க, திலான் விஜேசிங்க, சமபக ராமநாயக்கா, ஜூ குர்னைன், பி மில்ட்டன், ரஞ்சித் மதுருசிங்க, டி லலிதமான பெர்னாண்டோ, ஜயானந்த வர்ணவீர, மார்வன் அத்தபத்து, வருண வராகொட, பியல் விஜயதுங்க-

[எ]

## கல்முனை ஸாஹிராவில் "லெதர்போல்" கிரிக்கெட்

அக்கரைப்பற்று மார்ச் 28

கல்முனை ஸாஹிராக் கல்லூரியில் "லெதர்போல்" கிரிக்கெட் (கடின பந்து) அறிமுகம செய்து வைக்கப்பட்டுள்ளது-

கடினபந்து கிரிக்கெட் உபகரணங்களுக்கென ஸாஹிராக் கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சங்கம 25,000 ரூபாவை முதற் கட்டமாக வழங்கியிருக்கிறது- கிரிக்கெட் துறை வளர்ச்சிக்கு மேலும நிதியுதவிகள் வழங்கப்படவிருக்கிறது-

கல்லூரி அதிபர் ஜனாப் ஏ எம ஹுசைன் விளையாட்டு ஆசிரியர் ஜனாப் எம ஐ எம முஸ்தபா ஆகியோர் மேற்கொண்ட முயற்சியின் காரணமாகவே மேற்படி கடினபந்து கிரிக்கெட் இங்கு அறிமுகம செய்து வைக்கப்பட்டது- மாணவர்கள் தற்போது கிரிக்கெட் பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்-

முதலாவது போட்டியை மிகவும விமரிசையாக நடாத்துதற்கான எல்லா ஒழுங்குகளையும மேற்கொண்டுள்ளதாக விளையாட்டு ஆசிரியர் ஜனாப் எம ஐ எம முஸ்தபா தெரிவித்தார்-

(எ-035)




## மின்சார உற்பத்தி சாதனத்தை கண்டுபிடித்த இளைஞருக்கு பாராட்டு

புத்தளம மார்ச் 27 சிறிதளவு நீரிலிருந்து நீர்மின் சாரம உற்பத்தி செய்யும சிறிய இயந்திரம ஒன்றை சமன் பெரேரா என்ற (வயது 19) இளைஞர் கண்டுபிடித்துள்ளார்-

இதனை கண்டுபிடித்ததன் மூலம ஜனாதிபதி திரு ஆர் பிரேமதாசாவிடமிருந்து பாராட்டுப் பெற்றார்-

ஜனாதிபதியின் நடமாடும செயலக சேவையின் போது இந்த இளைஞர் ஜனாதிபதி செயலகத்துக்கு இந்த இயந்திரத்துடன் வந்து அனைவர் முன்னிலையிலும இதனை இயக்கிக் காட்டினார்-

இவரை ஜனாதிபதி பாராட்டினார்-

அகலவத்தையைப் பிறப்பிடமாகக் கொண்ட சமன் பெரேரா - வாய்க்கால்கள் - குழாய்கள் - அலைகள் என்பவற்றிலிருந்து வழிந்தோடும சிறிதளவு நீரைக் கொண்டு நீர் மின் சாரம உற்பத்தி செய்யும சிறிய இயந்திரமொன்றை உருவாக்கி உள்ளார்-

இவரது அபார முயற்சியைக் கண்ணுற்ற மின்சக்தி - எரிசக்தி அமைச்சர் திரு பெஸ்டஸ் பெரேரா உடனடியாகவே 5000 ரூபாவை பரிசாக கொடுத்து அவரது ஊக்கத்துக்கு உற்சாகமளித்தார்-

இவரது அறிவை விருத்தி செய்யவும இவரது தொழில்நுட்ப அறிவை பெருக்கிக் கொள்ளவும பிரபல வர்த்தகர் ஒருவர் இவருக்கு உதவியளிக்க முன்வந்துள்ளார்-

அதற்கமைய சமன் பெரேராவை மேற்கு ஜெர்மன் நாட்டுக்கு மேற்கு ஜெர்மன் தூதராலயத்தின் மூலம ஜெர்மன் மொழியைக் கற்கவும வர்த்தகர் துணை புரிவதாக கூறியுள்ளார்-

(இ—241)

## வெற்றி, தோல்வி இல்லை

மடவளை, மார்ச்- 28 மடவளை மதினா குருநாகல் மல்லியதேவ கல்லூரிகளுக்கிடையிலான கிரிக்கெட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது-

அண்மையில் குருநாகல் வெலகெதர விளையாட்டரங்கில் நடைபெற்ற அகில இலங்கைப் பாடசாலைகளுக்கிடையிலான கிரிக்கெட் போட்டித் தொடரில் மடவளை மதினா மகளிர் கல்லூரி முதலாம அணி 9 விக்கெட்டுக்களை இழந்து 190 ஓட்டங்களைப் பெற்றது

மல்லியதேவ கல்லூரி சகல விக்கெட்டுக்களையும இழந்து 123 ஓட்டங்களைப் பெற்றது

இரண்டாம இன்னிங்ஸில் மதினா 2 விக்கெட்டுக்களை இழந்து 59 ஓட்டங்களைப் பெற்றது-

மல்லியதேவ 5 விக்கெட் இழப்பிற்கு 64 ஓட்டங்களைப் பெற்றது-

(எ—431)

## தொளஸ்பாகை த/வி முன்னணியில்

கட்டுகஸ்தோட்டை, மார்ச் 28 நாவலப்பிட்டி கோத்துணி பாடசாலைகளுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டியில் தொளஸ்பாகை தமிழ் வித்தியாலயம பல வெற்றிகளையும பாராட்டுக்களையும பெற்றது-

15 வயதுக்குக் கீழ்ப்பட்ட உயரம பாய்தல் போட்டியில் செல்வன் ரவீந்திரனும நீளம பாய்தல் போட்டியில் செல்வன் சந்திரராஜ் ஓட்டப் போட்டிகளில் செல்வன் கிருஷ்ணராஜ், செல்வி சுசாந்தி மலர் ஆகியோர் வெற்றி பெற்று விருதுகள் பெற்றனர்-

[எ—ரி—139]

# நியூஸிலாந்து கிரிக்கெட் கோஷ்டி

## உலக வீரரிடம் தோல்வி

கொழும்பு மார்ச் 29 உலக கிரிக்கெட் கோஷ்டிக்கும நியூசிலாந்து கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் உலகக் கிரிக்கெட் கோஷ்டி நியூஸிலாந்து கோஷ்டியை தோற்கடித்தது-

இப் போட்டி நியூஸிலாந்து கிரிக்கெட் கோஷ்டியைச் சேர்ந்த ரிச்சட் ஹட்லியின் உபகார நிதிக்காக விளையாடப்பட்டது-

ரிச்சட் ஹட்லி, எதிர்வரும நவமபர் மாதத்தில் நியூஸிலாந்து கோஷ்டியுடன் இங்கிலாந்து செல்வார்- அப்பொழுது இங்கிலாந்து கோஷ்டிக்கு எதிராக அங்கு விளையாடுவார்-

உலக கிரிக்கெட் குழுவிற்காக விளையாடிய இலங்கை வீரர் அரவிந்த டி சில்வா, எட்டு ஓட்டங்களை மட்டுமே எடுத்தார்

வேகப்பந்து வீச்சாளரான ரவிரத்னாயக்கா இரண்டு விக்கெட்டுகளை 46 ஓட்டங்களுக்கு வீழ்த்தியுள்ளார்-

இப் போட்டியில் இந்தியாவின் முன்னைய கிரிக்கெட் காப்டன் 51 ஓட்டங்களை எடுத்து வெளியேறாமல் இருந்தது குறிப்பிடத்தக்கது-

(எ—455)

## ஜாயா இல்லம் வெற்றி

தெல்தெனிய, மார்ச் 28 கு/தெல்தெனிய முஸ்லிம வித்தியாலயத்தில் ஜாயா, இக்பால் இல்லங்களுக்கு இடையில் பலபொள மைதானத்தில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் ஜாயா இல்லம 10 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது-

இப் போட்டியில் சிறந்த துடுப்பாட்டக்காரராக ஜாயா இல்லத்தைச் சேர்ந்த செல்வன் எஸ் எம அன்வரும இக்பால் இல்லத்தைச் சேர்ந்த செல்வன் எச் எம ஜிப்ரியும தெரிவு செய்யப்பட்டனர்- சிறந்த பந்து வீச்சாளராக ஜாயா இல்லத்தைச் சேர்ந்த செல்வன் கே எம ஓமர்தீன் தெரிவு செய்யப்பட்டார்-

[எ—ரி—289]

## ட்ரிப்பிள் செவன் வெற்றியீட்டியது

புத்தளம, மார்ச்- 28 விளையாட்டுத்துறை அமைச்சின் அனுசரணையுடன் புத்தளம உதவி அரச அதிபர் பிரிவுகளுக்கிடையே நடைபெறும உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் நகர சபை திடலில் ட்ரிப்பிள் செவனும வின்னர்ஸும மோதிக் கொண்டன-

"ட்ரிப்பிள் செவன்" கழகம 2—0 என்ற கோல்கள் வித்தியாசத்தில் வெற்றியீட்டியது-

(எ—ரி—241)

## மெய்வல்லுநர் போட்டி

புங்குடுதீவு, மார்ச் 28 யாழ் கோட்டக் கல்விப் பிரிவுப் பாடசாலைகளின் மெய்வல்லுநர்கள் போட்டிகள் அண்மையில் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றன-

(எ—240)

## காலியில் கிரிக்கெட்

கொழும்பு மார்ச் 29 காலி பகுதிகளின் பாடசாலைகளுக்கு இடையே 45 ஓவர் வரையறுக்கப்பட்ட கிரிக்கெட் போட்டிகள் இடமபெறவிருக்கின்றன-

இதற்கான செலவுகளை "பியுவர் பெவரேஜர்" ஸ்தாபனம ஏற்றுக் கொள்ளும-

இப்போட்டிகளில் ரிச்மண்ட் கல்லூரி, புனித அலோசியஸ் கல்லூரி, மகிந்த கல்லூரி பங்குபற்றும-

[எ—455]







வாவ மஸ்ஜிதுன் நூர் ஜும்மாப் பள்ளிவாசலில் நடைபெற்ற குத்பா பிரசங்கத்தின் தொகுப்பு

7-20 கவிதைச்சரம

6-50 அறிவிப்புகள்

7-00 வர்த்தக சேவை

7-45 மாகாணச் செய்திகள்

7-50 வர்த்தக சேவை

8-00 வாத்தியம

10-00 நாதஸ்வரம கே பி ராசமாணிக்கம

10-45 நினைவில் நிறைந்தவை

11-00 ஒலிபரப்பு முடிவு

ரூபாவை பாசரக தொடுத்த அவ

# விமான சேவைகள்



## மார்ச் 30 (வெள்ளிக்கிழமை)

### வந்து சேரும் நேரம

| | | |
|---|---|---|
| 0520 | பஹ்ரேன் | ஜீ எப் 142 |
| 0530 | குவைத் | கே யூ 361 |
| 0620 | லண்டன்- டுபாய் | யூ எல் 504 |
| 0745 | ஜித்தா- ரியாத் | யூ எல் 340 |
| 1225 | பாங்கொக் | ரி ஜீ 307 |
| 2000 | சிங்கப்பூர் | யூ எல் 303 |
| 2100 | மாலைதிவு | யூ எல் 102 |
| 2235 | சிங்கப்பூர் | எஸ் கியூ 402 |
| 0700 | டுபாய் மாலைதிவு | ஈ கே 802 |
| 0715 | சிப்பல் பாரீஸ் அபுதாபி | யூ எல் 564 |
| 0740 | பிராங்க்போர்ட் சூரிச் டுபாய் | யூ எல் 548 |
| 0800 | சிப்பல் தஹ்ரான் கராச்சி | கே எல் 801 |
| 1105 | திருச்சி | யூ எல் 133 |
| 1140 | சென்னை பமபாய் | ஐ சி 573 |
| 1145 | மாலைதிவு டுபாய் | ஈ கே 803 |
| 1306 | மாலைதிவு | யூ எல் 102 |
| 1545 | திருவனந்தபுரம | யூ எல் 162 |
| 1155 | பமபாய் சென்னை | ஐ சி 586 |
| 2235 | சிங்கப்பூர் | எஸ் கியூ 402 |
| 2245 | சென்னை | யூ எல் 122 |
| 2330 | சிங்கப்பூர் | யூ எல் 303 |
| 2350 | ஹொங்கொங் பாங்கொக் | யூ எல் 423 |

### புறப்படும நேரம

| | | |
|---|---|---|
| 0115 | அபுதாபி- சிப்பல்- பாரிஸ் | யூ எல் 663 |
| 0130 | டுபாய்- சோபியா | எல் இசட் 582 |
| 0200 | ரோம | யூ எல் 581 |
| 0230 | டுபாய்- சூரிச்- பிராங்போர்ட் | யூ எல் 547 |
| 0625 | பஹ்ரேன் | ஜீ எப் 142 |
| 0720 | குவைத் | கே யூ 362 |
| 0915 | ஜித்தா- ரியாத் | யூ எல் 340 |
| 0920 | சிங்கப்பூர் | யூ எல் 302 |
| 1325 | பாங்கொக் | ரி ஜீ 308 |
| 1730 | மாலைதிவு | யூ எல் 101 |
| 2320 | டுபாய்- லண்டன் | யூ எல் 503 |
| 2350 | சிங்கப்பூர் | எஸ் கியூ 401 |

## மார்ச் 31 (சனிக்கிழமை)

### வந்து சேரும நேரம

| | | |
|---|---|---|
| 0405 | மஸ்கட் | ஜீ எப் 3144 |
| 0540 | ரோம | யூ எல் 582 |

### புறப்படும நேரம

| | | |
|---|---|---|
| 0520 | மஸ்கட் | ஜீ எப் 3145 |
| 0800 | டுபாய் மாலைதிவு | ஈ கே 802 |
| 0815 | திருச்சி | யூ எல் 131 |
| 0845 | பாங்கொக் ஹொங்கொங் | யூ எல் 622 |
| 0900 | மாலைதிவு | யூ எல் 101 |
| 0930 | சிங்கப்பூர் | யூ எல் 302 |
| 1235 | சென்னை பமபாய் | ஐ சி 585 |
| 1245 | மாலைதிவு டுபாய் | ஈ கே 803 |
| 1300 | திருவனந்தபுரம | யூ எல் 161 |
| 1730 | பஹ்ரேன் | யூ எல் 201 |
| 1840 | பமபாய் சென்னை | ஐ சி 622 |
| 1915 | சென்னை | யூ எல் 121 |
| 1940 | கராச்சி, தஹ்ரான் சிப்பல் | கே எல் 802 |
| 2350 | சிங்கப்பூர் | எஸ் கியூ 401 |

குறிப்பு— யூ எல் — எயார் லங்கா, ஐ சி — இந்தியன் எயார் லைன்ஸ் ஈ கே — எமிரேட்ஸ் ஏஸ் யூ — ஏரோ புளொட், ஜீ எப் — கல்ப் எயர், யூ டி — யூ டி ஏ, டி எப் — கொண்டோர் எஸ் கியூ — சிங்கப்பூர் எயர் லைன்ஸ், பி கே — பாகிஸ்தான் இன்டர்நேஷனல் எயர் லைன்ஸ் கே யூ — குவைத் எயர்வேய்ஸ் எஸ் வீ — சவூதியா, எஸ் டி — ஸ்டேர்லிங் எயர் லைன்ஸ் ரீ ஜி — தாய் எயர் வேய்ஸ், பீ பீ — பால் எயர், எல் இஸட் — பிரத்தியேக சேவை, எல் டி — பிரத்தியேக சேவை, டி கே பிரத்தியேக சேவை, கே எல் —றோயல் எயார் லைன்ஸ்,

விமான சேவைகள் மாற்றம் பற்றி அறிய தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கம 452218 (விமான நிலையம)

# வானொலி

## 30—3—1990

அதிகாலை

2-45 ஸஹர் விசேட நிகழ்ச்சி

காலை

5-00 நாதாஞ்சலி

5-05 திருமுறைப் பாடல்கள் எம வர்ணகுலசிங்கம

5-30 பாமாலை - காமாட்சி அம்மன் திருவிருத்தம

5-45 சைவநற்சிந்தனை

5-50 இஸ்லாமிய நற்சிந்தனை ஐ எஸ் நிஸாம ஷெரீப்

5-55 போதிமாதவனின் போதனைகள்

6-00 வர்த்தக சேவை

6-30 செய்திகள்

6-40 செய்தித்தாள் கண்ணோட்டம

6-50 அறிவிப்புகள்

7-00 வர்த்தக சேவை

7-30 பாடசாலைக் கூட்ட நிகழ்ச்சி

7-45 மாகாணச் செய்திகள்

7-50 வர்த்தக சேவை

8-00 சாகித்திய மஞ்சரி

8-15 மெல்லிசைப் பாடல்கள்

8-30 உருக மஞ்சரி

9-00 வர்த்தக சேவை

பகல் —

10-00 இசையமுதம

10-20 பக்தி மஞ்சரி

11-00 நாதஸ்வரம லேக் சின்ன மௌலானா

12-00 வர்த்தக சேவை

12-45 செய்திகள்

12-55 அறிவிப்புகள்

1-00 வர்த்தக சேவை

மாலை —

6-00 செய்திகள்

6-10 அறிவிப்புகள்

6-15 இப்தார் விசேடமுஸ்லிம நிகழ்ச்சி

6-30 திருவாசகம பொன்- சுந்தரலிங்கம

7-00 ஹெமமாதகம தும்புரு வாவ மஸ்ஜிதுன் நூர் ஜுமமாப் பள்ளிவாச லில் நடைபெற்ற குத்பா பிரசங்கத்தின் தொகுப்பு

7-20 கவிதைச்சரம நடத்துபவர் பாவலர் பசீல் காரியப்பர்

7-41 இஷாத் தொழுகைக் கான அஸான்

7-45 முஸ்லிம செய்திகள்

7-50 வரலாற்றில் ஓர் ஏடும குறிப்பும ஸலவாத்தும

7-55 உலகச் செய்திகள்

8-00 சதிப் பாடல் பயிற்சி - நடத்துபவர்- எம நவரட்ணம

8-15 களத்துமேடு - கேள்வி- பதில்

8-30 விவசாய நாடகம வயலோடு வசந்தங்கள்

8-45 தவக்கால கத்தோலிக்க சிறப்பு நிகழ்ச்சி

9-00 செய்திகள்

9-10 அறிவிப்புகள்

9-20 பக்திப் பாடல்கள்

9-30 செந்தமிழ் வளர்த்த செம்மல்கள் - அச்சு வேலி தாமோதரம் பிள்ளை பேசுபவர்- க சி குலரத்தினம

9-45 சுகாப் பிரசங்கம - கிருபானந்தவாரியார்

10-30 நினைவில் நிறைந்தவை

11-00 ஒலிபரப்பு முடிவு

## 31—3—1990

அதிகாலை —

2-45 ஸஹர் விசேட நிகழ்ச்சி

காலை —

5-00 நாதாஞ்சலி

5-05 தோத்திரமாலை - வெங்கடேஸ்வர சுப்ரபாதம

5-30 பாமாலை நவக்கிரக ஸ்தோத்திரம

5-45 சைவ நற்சிந்தனை

5-50 கிறிஸ்தவ நற்சிந்தனை

5-55 பக்திப் பாடல்

6-00 வர்த்தக சேவை

6-30 செய்திகள்

6-40 செய்தித்தாள் கண்ணோட்டம

6-50 அறிவிப்புகள்

7-00 வர்த்தக சேவை

7-45 மாகாணச் செய்திகள்

7-50 வர்த்தக சேவை

8-00 வாத்தியம

8-15 தமிழ் மூலம சிங்களம நடத்துபவர் என் டீ பீரிஸ்

8-30 மாணவர் மன்றம எம எச் பௌசுல் அமீர்

9-00 வர்த்தக சேவை

பகல் —

10-00 கல்வியரங்கம

10-30 அறிவுச்சுடர் நடத்துபவர் கே எஸ் பாலச்சந்திரன்

11-00 இசையமுதம

11-30 ஓடி விளையாடு பாப்பா நடத்துபவர் ரேலங்கி செல்வ ராஜா

11-45 அரங்கேற்றம

12-00 வர்த்தக சேவை

12-45 செய்திகள்

12-55 அறிவிப்புகள்

1-00 வர்த்தக சேவை

மாலை —

6-00 செய்திகள்

6-10 அறிவிப்புகள்

6-15 இப்தார் விசேட முஸ்லிம நிகழ்ச்சி

6-30 ஞானக்கோவை

6-45 இசைப் பயிற்சி நடத்துபவர் ஏ எஸ் நாராயணன்

7-00 இளைஞர் இதயம நடத்துபவர் செய்யது ஏ மௌலானா

7-20 இலக்கியக் களஞ்சியம தொகுப்பு கலைவாதி கலீல்

7-40 இஷாத் தொழுகைக் கான அஸான்

7-45 முஸ்லிம செய்திகள்

7-50 வரலாற்றில் ஓர் ஏடும குறிப்பும ஸலவாத்தும

7-55 உலகச் செய்திகள்

இரவு —

8-00 நாட்டுப் பாடல்கள்

8-15 குன்றின் குரல் தொகுப்பு ஜோசப் ராஜேந்திரன்

8-45 மெல்லிசைப் பாடல்கள்

9-00 செய்திகள்

9-10 அறிவிப்புகள்

9-20 பக்திப் பாடல்கள்

9-30 நாடகம அந்த முழக்கம "என்றும ஒலிக்கும" எழுதியவர் எஸ் ஐ எம அப்துல் ஜப்பார்

10-00 நாதஸ்வரம கே பி ராசமாணிக்கம

10-45 நினைவில் நிறைந்தவை

11-00 ஒலிபரப்பு முடிவு

# டெலிவிஷன்

## ரூபவாஹினி

### 30—3—1990

பி. ப —

4-30 கல்வி நிகழ்ச்சி

5-00 செய்திகள் (சிங்களம)

5-30 த றோட் றன்னர் ஷோ

6-00 முமமணிகளுக்கு அஞ்சலி

6-15 காட்டூன் படம

6-30 செய்திகள் (தமிழ்)

6-55 மியூசிக்கல் புரோகிராம

7-25 உருமய

8-00 செய்திகள் (சிங்களம)

8-30 ரெலி ட்ராமா (சிங்களம)

9-00 லொட்டோ சீட்டிழுப்பு

9-30 செய்திகள் (ஆங்கிலம)

10-00 வார இறுதித் திரைப் படம. (ரீ ஃடுபா 2) (ஆங்கிலம)

11-40 ஒளிபரப்பு முடிவு.

## ஐ. டி. என்.

6-00 முமமணிகளுக்கு அஞ்சலி

6-15 கொக்ளிஷெல் பே

6-30 செய்திகள் - தமிழ்

7-00 கீத்தாஞ்சலி

7-30 மியூசிக்கல் ஷோ கேஸ்

8-00 ருப்பீஸ் அன்ட் சென்ஸ்

8-30 பீச் கோமபர்ஸ்

9-00 அபான்ஸ் சனிகா சந்தல்ல

9-30 "ஏ பேர்பெக்ட் [illegible]"

10-00 செய்திகள் - ஆங்கிலம

10-26 பேர்பெக்ட் ஸ்பை

தொடர்ச்சி

தினபதி

வார இதழ் "சிந்தாமணி" ஞாயிறுதோறும் வெளிவரும்

# ஐ. நா. உறுப்பினர்கள் ஜூனில் இலங்கை வருவர்

## அமைச்சர் ரஞ்சன் தகவல்

கொழும்பு, மார்ச் 29

ஐ நா சபையின் மனித உரிமைகள் குழு உறுப்பினர்கள் இலங்கை வருவதற்கு அரசாங்கம் எதுவித ஆட்சேபனையையும் தெரிவிக்காத ஜூன் மாதம் அவர்கள் இங்கு வருவார்கள்.

வெளிவிவகார அமைச்சரும் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சருமான ரஞ்சன் விஜேரத்ன இப்படி நேற்று முன்தினம் கூறினார்.

அமைச்சரவை முடிவுகளைத் தெரிவிப்பதற்காக நேற்று முன்தினம் கூட்டிய பத்திரிகையாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அண்மைக் காலங்களில் இலங்கையை விட்டுச் சென்று வெளிநாடுகளில் தஞ்சம் புகுந்துள்ள சுமார் 17 சட்டத்தரணிகள் இலங்கையில் மனித உரிமைகள் மீறப்படுவதாகவும் தமது உயிருக்கு ஆபத்து ஏற்படலாமென்றும் பிரசாரம் செய்து வருகின்றனர். இதையடுத்தே நாளை மனித உரிமைகள் குழு உறுப்பினர்கள் இலங்கை வந்து நிலைமையை நேரில் அவதானிக்க விரும்புவதாகக் கூறப்படுகிறது.

செய்தியாளர் கேட்ட கேள்விகளுக்கு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசாங்கத்துக்கான சட்டத்தரணிகள் கொழும்பில் இங்கு பணிபுரிகின்றனர். இங்கு எல்லோருக்கும் தெரிந்த உண்மை. சுமார் 17 சட்டத்தரணிகள் நாட்டை விட்டு வெளியேறி இருப்பது ஏன்?

அவர்கள் ஏதாவது ஒரு சதியில் சம்பந்தப்பட்டிருக்கலாம் அல்லவா?

இங்கு ஐ நா சபையின் மனித உரிமைகள் குழு உறுப்பினர்கள் வருகை தருகின்றனர். அவர்கள் இங்கு வருவதற்கு நாம் ஆட்சேபனை தெரிவிக்கவில்லை. மறைப்பதற்கு ஒன்றுமில்லை.

இப்படி அமைச்சர் ரஞ்சன் கூறினார்.

(ல—கு)

# இலங்கையர் தம் நாட்டை சுயமாக நிர்வகிக்கும் காலம்

## சென்னையில் இந்திய அமைச்சர்

கொழும்பு, மார்ச் 29

இலங்கையர் தமது நாட்டை சுயமாக நிர்வகிக்கும் காலம் வந்து விட்டது. அதனாலேயே இந்தியப் படைகளைத் திருப்பி அழைக்க இந்தியா தீர்மானித்தது.

இந்திய பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் டாக்டர் ராஜா ராமண்ணா இவ்வாறு கூறினார். கடந்த செவ்வாய்க்கிழமை சென்னையில் பத்திரிகையாளர்களிடம் பேசுகையிலேயே அவர் இதைச் சொன்னார்.

"வடக்கு கிழக்கு மாகாணத்தில் அமைதியையும் ஜனநாயக சுதந்திர சூழலையும் உருவாக்கி மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்தக் கூடிய நிலைமையை ஏற்படுத்தும் முக்கிய பொறுப்பு எம்மிடம் ஒப்படைக்கப்பட்டது.

இப்பணியை திருப்திகரமாக நிறைவேற்றி விட்ட பின்னரே அங்கிருந்து வெளியேற தீர்மானித்தோம் என்றும் அமைச்சர் கூறினார்.

வடக்கு கிழக்கு மாகாண சபை இப்போது இல்லை. இது முற்றாக செயலிழந்து விட்டதே" என பத்திரிகையாளர்கள் அமைச்சரிடம் சுட்டிக்காட்டியபோது —

"அது இலங்கை மக்கள் தீர்மானிக்க வேண்டிய விடயம். இலங்கை எமது நாடு அல்ல. அடுத்த ஒரு நாட்டை எம்மால் நிர்வகிக்க முடியாது.

அவர்கள் எதை தீர்மானித்திருக்கின்றனரோ அது அவர்களுடைய சொந்த விவகாரம். அதில் இந்தியா எப்போதும் தலையிடக் கூடாது என நான் உறுதியாகக் கூறுகின்றேன். அதையே இலங்கை அரசும் விரும்புகின்றது" என்று டாக்டர் ராஜா ராமண்ணா பதில் அளித்தார்.

தற்பொழுது இலங்கையில் "வொயிஸ் ஒப் அமெரிக்கா" உட்பட பல வெளிநாட்டு ஏஜென்சி தகவல் பரிவர்த்தனை நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன. அப்படியானால் இலங்கை - இந்திய சமாதான உடன்படிக்கையுடன் பின் இணைப்பாக சேர்க்கப்பட்டிருந்த ஜே ஆர் ஜெயவர்த்தனா — ராஜீவ் கடிதங்கள் செல்லுபடியற்றனவாகி விட்டதா? என நிருபர் ஒருவர் அமைச்சரிடம் கேட்டார்.

இக்கேள்வியை இலங்கை அரசிடமே கேட்டிருக்க வேண்டும். எமது பாதுகாப்பு எல்லைக்குள் நடக்கிறதென்றால் அதை நாம் தடை செய்ய முடியும். ஆனால் அது இலங்கை மண்ணிலேயே நடைபெறுகின்றது. அதைக் கட்டுப்படுத்தவோ ஒலிபரப்புகளை தடை செய்யவோ எம்மால் முடியாது என்று கூறிய அமைச்சர் இலங்கை - இந்திய சமாதான உடன்படிக்கையினால் பாரிய நன்மைகள் ஏற்பட்டுள்ளன. குறிப்பாக தமிழ் மொழியும் நிர்வாக மொழியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இப்படியே மேலும் பல நன்மைகள் ஏற்பட்டுள்ளன என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

கப்பல் படைத் தளபதியான வைஸ் அட்மிரல் ராமதாஸ் கூறியதாவது—

இந்திய அமைதிப் படையினர் மிகப் பெரிய நோக்கம் ஒன்றை நிறைவு செய்துள்ளனர். அதாவது புலிகள் இயக்கத்தினரை ஜனநாயக வழிக்குத் திருப்பிய பணியே அது.

இந்தியப் படையினர் அங்கு சென்றிருக்காவிட்டால் புலிகள் ஒருபோதும் ஜனநாயக வழிக்குத் திரும்பி இருக்க மாட்டார்கள் என்று அவர் பத்திரிகையாளர்களிடம் கூறினார்.

(ந-ய)

# ரமழான் நோன்பு ஆரம்பம்

கொழும்பு, மார்ச் 29

நேற்று வியாழன் அதிகாலை ஸஹர் செய்து முஸ்லிம்கள் ரமழான் நோன்பை ஆரம்பித்தனர்.

நாட்டின் எப்பகுதியிலும் ரமழான் தலைப்பிறை தென்படாததால் வியாழன் முதல் நோன்பை ஆரம்பிப்பதென்று கொழும்பு பள்ளிவாசலில் நடைபெற்ற உலமாக்களின் மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது.

பள்ளிவாசல்களில் நேற்று முன்தினம் இரவு தராவீஹ் தொழுகைகளும் நடத்தப்பட்டன.

ஹிஸ்புல் குர்ஆன் மஜ்லிஸுகளும் நடத்தப்பட்டன.

(ல-107)

# முன்னாள் மேயரை கொலை செய்ய முயன்ற பிரதிவாதிக்கு பிடியாணை

கொழும்பு மார்ச் 29

நாடாளுமன்ற குழுவின் பிரதித் தலைவரும் குருநாகல் முன்னாள் மேயருமான திரு ஆரியரேக்காவை கொலை செய்ய முயன்ற வழக்கின் பிரதிவாதிக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்ற நீதிவான் திரு ஏ எஸ் எம் பெர்னாண்டோ பிடியாணை பிறப்பித்தார்.

ஜே வி பி இயக்க உறுப்பினர் என்று கூறப்படும் எம் சேனவிரத்ன அல்லது குமார அல்லகலுமஹத்தயா என்ற பிரதிவாதியை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறே இந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டது.

பொல்கஹவலையில் வைத்து 1987 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதலாம் திகதியன்று குருநாகல் மேயரை கொலை செய்ய முயன்றமை — சட்ட விரோதமாக துப்பாக்கியை தமவசம் வைத்திருந்தமை போன்ற குற்றச்சாட்டின் பேரில் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் பிரதிவாதிக்கெதிராக இந்த வழக்கு தொடரப்பட்டிருக்கிறது.

பிரதிவாதியை கைது செய்ய பிடியாணை பிறப்பித்த நீதிவான் வழக்கு விசாரணையை மே மாதம் 31 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தார்.

(இ—வ)

# முடிவுக்கு வரவேற்பு

கொழும்பு மார்ச் 29

இஸ்ரவேல் நலன் காக்கும் பிரிவை மூடிவிடுமாறு ஜனாதிபதி திரு ஆர் பிரேமதாச உத்தரவிட்டிருப்பது வரவேற்க வேண்டியதொன்றாகும்.

தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவர் திரு டி அய்யாத்துரை விடுத்திருக்கும் அறிக்கையில் இப்படி கூறி இருக்கிறார்.

இஸ்ரவேல் நலன் காக்கும் பிரிவினர் இங்கு வந்த போது எமது உள்நாட்டு விவகாரங்களில் அந்நிய தலையீடுகள் ஏற்படலாம் என்று ... சர்வதேச ரீதியில் எமது நாட்டின் மீது பல்வேறு சந்தேகங்கள் எழுவதற்கும் காரணமாக இருக்கக் கூடும் என்று அவர் அந்த அறிக்கையில் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

(இ—வ)

# அதிபர் பதவிக்கான நேர்முக பரீட்சை வேறு தினங்களில்

கொழும்பு, மார்ச் 29

இன்று 30 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஜீ சி ஈ சாதாரண பரீட்சைக்கு மேற்பார்வையாளர்களாக நியமிக்கப்பட்டுள்ள ஆசிரியர்கள் முதலாம் தர அதிபர் பதவிகளுக்கு விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகப் பரீட்சை வேறு தினங்களில் நடத்தப்படும் ... திகதியே ஆரம்பமாகின்றது.

இதனால் இப் பதவிகளுக்கு விண்ணப்பித்த ஆசிரியர்கள் பரீட்சை மண்டபங்களில் மேற்பார்வையாளர்களாக கடமைக்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு நியமிக்கப்பட்டுள்ள ஆசிரியர்களுக்கு நேர்முகப் பரீட்சை வேறு தினங்களில் நடத்தப்படும். எனவே இவர்கள் பரீட்சை மண்டபங்களுக்கு ...

# தாயகம் திரும்பிய இந்திய படையினருக்கு சென்னையில் வரவேற்பு

## கருணாநிதி சமுகமளிக்கவில்லை

கொழும்பு, மார்ச் 29

கடந்த 24 ஆம் திகதி ...

தது ஏன் என பத்திரிகையாளர்கள் ராஜாங்க அமைச்சர் டாக் ...

# முஸ்லிம் ஊழியர்களுக்கு துறைமுகத்தில் தொழுகை அறை

## அமைக்க கோரிக்கை

கொழும்பு, மார்ச் 29

கொழும்பு துறைமுகத்தில் வேலை செய்யும் முஸ்லிம் ஊழியர்களுக்குத் தொழுகை அறை ஒன்றை அமைத்துத் தருமாறு ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா துறைமுக ஊழியர் காங்கிரஸின் சார்பில் அதன் அமைப்பாளர் ஜனாப் எம் ஏ எம் காமில் அருஸ் இவ்வாறு ஜனாதிபதியிடம் கேட்டுள்ளார்.

ஜனாதிபதிக்கு அவர் எழுதியிருக்கும் கடிதம் ஒன்றில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:

முஸ்லிம் ஊழியர்களுக்குத் ...

கொழும்பு, மார்ச் 29

கடந்த 24 ஆம் திகதி திருகோணமலையில் இருந்து வெளியேறிய இந்திய அமைதிப் படையினருக்கு சென்னைத் துறைமுகத்தில் வரவேற்பு அளிக்கப்பட்டது.

இந்த வரவேற்பு வைபவத்திற்கு புதுடில்லியிலிருந்து பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் டாக்டர் ராஜ ராமண்ணா வந்திருந்தார்.

தமிழக ஆளுநர் டாக்டர் பி.ஸி அலக்சாண்டரும் வந்திருந்தார். எனினும் தமிழக முதல்வர் திரு மு கருணாநிதி வரவில்லை.

திரு மு கருணாநிதி இந்த வைபவத்தில் கலந்து கொள்ளாதது ஏன் என பத்திரிகையாளர்கள் ராஜாங்க அமைச்சர் டாக்டர் ராஜ ராமண்ணாவிடம் கேள்வி மேல் கேள்வி எழுப்பினர்.

“தமிழ்நாட்டு அரசை ஆளுநர் பிரதிநிதித்துவம் செய்கிறார். அவர் இங்கு வந்திருக்கிறார். அது எனக்கு மகிழ்ச்சியை அளிக்கிறது. அதுவே போதும்.

திரு கருணாநிதி வராததற்கான காரணம் எனக்குத் தெரியாது. அவர் வராமைக்கு நல்ல காரணங்கள் ஏதாவது இருக்கலாம்” என டாக்டர் ராமண்ணா பதில் அளித்தார்.

(ல—ந)

# போதியளவு பஸ்கள் கிழக்கு மாகாணத்துக்குப் பெற்றுத்தர கோரிக்கை

கொழும்பு, மார்ச் 29

கிழக்கு மாகாணத்தில் போக்குவரத்து நடவடிக்கைகளை சீரமைப்பதற்கும் போதியளவு பஸ்களை பெற்றுத் தருமாறும் கிழக்குப் பகுதி எம்.பி திரு பிரின்ஸ் காசிநாதர் தலைமையிலான பிரதிநிதிகள் குழு போக்குவரத்து அமைச்சர் திரு விஜேபால மெண்டிஸை கேட்டிருக்கிறது.

இக் குழுவினர் நேற்று முன்தினம் காலை போக்குவரத்து அமைச்சில் வைத்து அமைச்சர் விஜேபால மெண்டிஸை சந்தித்தனர்.

கிழக்குப் பகுதிக்கு புதிதாக 54 பஸ்களும் 140 பஸ் என்ஜின்களும், கல்முனை டிப்போவுக்கு 15 பஸ்களும், மூதூர் டிப்போவுக்கு 14 பஸ்களும் தேவைப்படுகின்றன என்றும் அவர்கள் அமைச்சரிடம் சுட்டிக்காட்டினர்.

குழுவினரின் கோரிக்கைக்கு இணங்க கிழக்குப் பகுதிக்கு காலவிரைவில் புதிய பஸ்களை பெற்றுக் கொடுப்பதாக அமைச்சர் மெண்டிஸ் உறுதியளித்தார்.

(ல—வ)

---

இப்பத்திரிகையை அச்சிட்டு வெளியிட்டது இன்டிபெண்டன்ட் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் 5 குணசேன மாவத்தை கொழும்பு 12 இலங்கை தபால் பெட்டி இல 1613. வெளியிட்ட திகதி 30 மார்ச் 1990

DINAPATHI 5, Gun sena Mawatha, Colom bo — 12
P O Box 1613

ளுக்கான நேர்முகப் பரீட்சை வேறு தினங்களில் நடத்தப் படும்.

இப்பதவிகளுக்கான நேர்முகப் பரீட்சையும் இன்று 30 ஆம் திகதி [illegible] ட்சை வேறு தினங்களில் நடத்தப் படும். எனவே இவர்கள் பரீட்சை மண்டபங்களுக்கு கடமைக்குச் செல்ல வேண்டும் என கல்விச் சேவைகள் [illegible] ணைக் குழு அறிவித்துள்ளது.

(ல—ய)

# நாம் ஆரம்ப சுகாதார நடவடிக்கைகளில் கவனம் செலுத்த வேண்டும்

நாம் ஆரம்ப சுகாதார நடவடிக்கைகளில் போதிய கவனம் செலுத்த வேண்டும்.

வீடமைப்பு ராஜாங்க அமைச்சர் அல்ஹாஜ் இமதியாஸ் பாக்கீர் மாக்கார் இவ்வாறு கூறினார்.

பேருவளை நகர, கிராம எழுச்சி சுகாதார வாரத்தை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அமைச்சர் தொடர்ந்து கூறியதாவது:

தேகாரோக்கியமுள்ள சமுதாயமே ஒரு நாட்டின் செல்வமாகும். அவர்களாலேயே நாட்டைக் கட்டியெழுப்ப முடியும்.

நோயாளிகளால் தேசத்தின் விருத்திக்கு உழைக்க முடியாது.

எனவே நாம் சுகாதாரத்தைப் பேணி வாழ வேண்டும் என்றார்.

மேல் மாகாண சபை உணவு, கூட்டுறவு, கைத்தொழில், கடற்றொழில், சமூக சேவைகள் அமைச்சர் ஜனாப் ஏ எம் யூஸுப், மேல் மாகாண சபை உறுப்பினர் திரு நெல்சன் தர்மசிறி அல்விஸ்.

தேசிய சுகாதார வித்தியாலயப் பணிப்பாளர் திரு ஏ பி நாணயக்கார, களுத்துறை ஆசாங்க அதிபர் திரு அன்ரா சில்வா, பேருவளை உதவி அரசாங்க அதிபர் திரு திஸாநாயக்க பிரதேச சுகாதார அதிகாரி திருமதி சுயாகாந்தி உட்பட மற்றும் பலரும் இக்கூட்டத்தில் பேசினர்.

(இ—007)

## ஊர்ஜிதம்

கொழும்பு மார்ச் 28

“மூதூர் – கிளிவெட்டி கொலை வழக்கில் எதிரியின் மரண தண்டனையை கொழும்பு மேன் முறையீட்டு நீதிமன்றம் அண்மையில் ஊர்ஜிதம் செய்தது.

மூதூர் கிளிவெட்டியைச் சேர்ந்த புண்ணியமூர்த்தி தோபாலபிள்ளையை 10–3–83 இல் கொலை செய்ததாக சந்தேக நபர் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இந்த கொலையை செய்ததற்காக மட்டக்களப்பு மேல் நீதிமன்றம் சந்தேக நபருக்கு மரண தண்டனை விதித்தது.

இந்த தண்டனையை எதிர்த்து அவர் மேன்முறையீடு செய்திருந்தார்.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் முன்னிலையில் இம் மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

மேன்முறையீட்டை கவனித்த நீதியரசர்கள் தண்டனையை ஊர்ஜிதம் செய்தனர்.

(இ—கு)

என்றும் மேலும் அங்கு அளிக்கையில் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

(இ—வ)

[illegible] விடுக்கப்பட்டு உள்ளது.

ஸ்ரீலங்கா துறைமுக ஊழியர் [illegible] மேலும் குறிப்பிட்டிருப்பதாவது

முஸ்லிம் ஊழியர்களுக்குத் துறைமுகத்தில் தொழுவதற்கு வசதி இல்லை. இது பெரும் குறையாகும்.

தமது ஐவேளைத் தொழுகையைக் கூட தொழுவதற்கு அவர்களுக்கு வசதி இல்லை.

[illegible] நேரத்தில் [illegible] வசதியாக [illegible] இடவசதிகளை ஏற்படுத்தித் தர வேண்டும்.

[illegible] நலன்கா[illegible] நன்றி தெரிவிக்கிறோம்.

இவ்வாறு ஜனாப் காசிம் அவர்கள் தமது கடிதத்தில் குறிப்பிட்டு உள்ளார்.

(ல—007)

# சகல இனங்களும் சமாதானமாக வாழ வழி செய்ய வேண்டும்

## புலிகளிடம் கோரிக்கை

மூதூர், மார்ச் 27

சேருவில உதவி ஆணையாளர் பிரதேசத்தில் சிங்களவர்களும் தமிழர்களும் இன சௌஜன்ய உணர்வுடன் பரஸ்பர உறவு கொண்டு வாழ வழி செய்ய வேண்டும்.

சேருவில உதவி ஆணையாளர் திரு ஏ கல்கொட்டுவ விடுதலைப் புலிகள் முக்கியஸ்தர்களிடம் இவ்வாறு கோரியுள்ளார்.

சேருவில உதவி ஆணையாளர் திரு ஏ கல்கொட்டுவ விடுதலைப் புலிகள் பிரதேசப் பொறுப்பாளர்களான திரு வி [illegible] திரு எம் தவநேசன் ஆகியோரை தனது அலுவலகத்திற்கு அழைத்து [illegible] கோரிக்கையை இவர் விடுத்துள்ளார்.

சேருவில பிரதேசத்தில் வாழும் எல்லா இனத்தவர்களும் சுமுகமான சூழ்நிலையில் அமைதியாக வாழ வேண்டும்.

[illegible] தான் இவ்விதமான கோரிக்கையை விடுவதாக உதவி ஆணையாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

[illegible] ரும் பிரசன்னமாகி இருந்தனர்.

இரு தரப்பினரும் பல்வேறு விடயங்கள் தொடர்பாக மனம் விட்டுப் பேசியுள்ளனர். (இ—401)

## இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

இலங்கை நிருவாக சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கும் பிற அரச உத்தியோகத்தர்களுக்குமான வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையும் இரண்டாம் மொழிப் பரீட்சையும் — 1990

என் 244

1990 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 02 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெறவிருந்த மேற்படி பரீட்சை 1990 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 19 ஆம் திகதி ஆரம்பமாகும் என்பதையும் உரிய பிரவேச அட்டவணைகளும், நேர அட்டவணைப் பிரதிகளும் எல்லாப் பரீட்சார்த்திகளுக்கும் தபால் மூலம் அனுப்பப்பட்டுள்ளன என்பதையும் இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அ.தர் வெதமுல்ல
பரீட்சை ஆணையாளர்

05/17/135,
மலே வீதி கொழும்பு—02
26 மார்ச் 1990

635